பக்கங்கள் : 14+கல்விச் சுடர்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 பங்குனி 22 புதன்கிழமை (05.04.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :129

## படையினரின் சீண்டல்கள் தொடர்ந்தால் தமிழ் மாணவர் ஆயுதமேந்த நேரிடும்!

### மாணவர் ஒன்றியம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.5

ஸ்ரீலங்காப் படையினரின் சீண்டல்கள் தொடர்ந்தால் தமிழ் மாணவர்கள் ஆயுதமேந்த நேரிடும்.

- இவ்வாறு யாழ். மாவட்டத் தமிழ் மாணவர் ஒன்றியம் எச்சரிக்கை விடுத்துள்ளது. பருத்தித்துறையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாணவர்கள் இருவர் குடும்பத்தினருடன் கைதுசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக ஒன்றியம் விடுத்த அறிக்கையிலேயே இந்த எச்சரிக்கை குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ் மாணவர்களாகிய எமது அடிப்படை உரிமைகளில் இராணுவம் தலையிடுவதும், மாணவர்கள் கொலை, கைது, சித்திரவதை ஆகியவற்றுக்கு உட்படுத்துவதும் தொடர்ந்தவண்ணமேயுள்ளது. இவ்வாறு செய்வதன் ஊடாக தமிழ் மாணவர்களை வம்புக்கு இழுக்கிறது இராணுவம்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## இன்று போவர் வன்னி வருவார்

கொழும்பு, ஏப். 05

அமைதி முயற்சிகளுக்கான நோர்வேயின் விசேட தூதுவர் ஜோன் ஹன்ஸன் போவர் நேற்று அரச பேச்சுக் குழுவின் உறுப்பினர்களான அமைச்சர்கள் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே, ரோஹித போகொல்லாகம உட்பட பல பிரமுகர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

அமைதிப் பேச்சுகளின் தற்போதைய நிலை குறித்தும் அடுத்தகட்ட அமைதிப் பேச்சுகளுக்கான ஏற்பாடுகள் குறித்தும் நேற்றைய பேச்சுகளின் போது ஆராயப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(14ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சில் தனித் தரப்பு தராவிடின் முஸ்லிம்கள் பங்குபற்றக்கூடாது

## முஸ்லிம் கவுன்ஸிலின் கூட்டத்தில் தீர்மானம் தனிப்படை அணிக்கும் எதிர்ப்பு வலுக்கிறது

கொழும்பு, ஏப்ரல் 05

இலங்கை அரசிற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இம்மாதம் ஜெனீவாவில் இடம்பெறவிருக்கின்ற அடுத்த சுற்று அமைதிப் பேச்சில் முஸ்லிம்களுக்குத் தனித்தரப்பு வழங்கப்பட வேண்டும். அப்படி வழங்காவிட்டால், அரச குழுவில் முஸ்லிம் பிரதிநிதிகள் எவரும் கலந்துகொள்ளக் கூடாது.

கடந்த சனிக்கிழமை அட்டாளைச்சேனையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்ஸில் நடத்திய முக்கிய கூட்டம் ஒன்றில் இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

சமாதானப் பேச்சில் முஸ்லிம் தனித்தரப்புத் தொடர்பாக முஸ்லிம்களின் நிலைப்பாடு என்னவென்று அறிவதற்காக இந்தக் கூட்டம் ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்ஸிலின் தலைவர் என்.எம். அமீன் தலைமையில் நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மயோன் முஸ்தபா மற்றும் பைஸல் காசிம் உட்பட கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த இருநூறுக்கும் மேற்பட்ட முஸ்லிம் பிரதிநிதிகளும் கலந்துகொண்டு தனிதரப்புத் தொடர்பான தமது கருத்துகளைப் பரிமாறிக்கொண்டனர்.

இக்கூட்ட முடிவில் நான்கு முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

(14ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் நேற்றுப் பேரணி

வவுனியா,ஏப்.5

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் உறுப்பினர்கள் கடத்தப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அவர்களை விடுவிக்கக் கோரியும் வவுனியாவில் உள்ள முன்பள்ளிகளின் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் நேற்றுச் செவ்வாய்க்கிழமை தமது கல்விச் செயற்பாடுகளைப் பகிஷ்கரித்துக் கண்டனப் பேரணி ஒன்றை நடத்தியுள்ளனர்.

கடந்த ஜனவரிமாதம் கடத்தப்பட்ட புனர்வாழ்வுக் கழகத்தின் ஆறு உறுப்பினர்களும் விடுதலை செய்யப்படவேண்டும் என்ற

(14ஆம் பக்கம் பார்க்க)

**நாளைய கல்விச்சுடரில்**

பௌதீகவியல் வினாத்தாள் II, உயிரியல் I, II விடைக்குறிப்புகள் என்பன வெளிவரும்.

## ஜனாதிபதியின் பாக். விஜயம் குறித்து இந்தியாவுக்கு மங்கள விளக்குவார்

கொழும்பு, ஏப். 05

பாகிஸ்தானுக்கு தாம் மேற்கொண்ட விஜயம் குறித்து இந்திய அரசியல் தலைவர்களுக்கு விளக்கமளிப்பதற்காகத் தமது வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவை புதுடில்லிக்கு அனுப்புவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்திருக்கிறார்.

இதன்படி இன்னும் ஓரிரு தினங்களில் அமைச்சர் மங்கள சமரவீர புதுடில்லிக்குச் செல்லவுள்ளார். அவர் அங்கு முக்கிய அரச பிரமுகர்களுடன் பேச்சு நடத்துவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இன்று வெளியுறவுத்துறைச்

(14ஆம் பக்கம் பார்க்க)

### ஐ.தே.கவுக்குள் பிளவு கருக்கட்டுகிறது

## ரணிலுக்கு எதிரான குழு இரகசிய மந்திராலோசனை

கொழும்பு ,ஏப். 05

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவை தலைமைப் பதவியிலிருந்து அகற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பது குறித்து ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கொழும்பில் இரகசிய மந்திராலோசனை நடத்தயிருக்கின்றனர்.

நேற்றுமுன்தினம் இரவு ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய உறுப்பினர் ஒருவரின் இல்லத்தில் இந்த மந்திராலோசனை நடத்தப்பட்டுள்ளது.

மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்

(14ஆம் பக்கம் பார்க்க)

## அமைதிக்காக முயற்சிக்கும் எந்தக் கட்சிக்கும் ஆதரவு

### ரணிலிடம் சோனியா காந்தி தெரிவிப்பு

புதுடில்லி, ஏப். 05

இலங்கையில் அமைதியை ஏற்படுத்த முயற்சியெடுக்கும் எந்தவொரு கட்சிக்கும் இந்தியா முழுமையான ஒத்துழைப்பை வழங்குமென்று இந்தியக் காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ள ஐ.தே.க. தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவை நேற்றுமுன்தினம் சந்தித்தபோதே சோனியா காந்தி மேற்கண்டவாறு கூறினார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைவரம் மற்றும் அமைதி முயற்சிகள் ஆகியன குறித்து இரு தலைவர்களும் நீண்ட நேரம் கலந்துரையாடினர்.

இலங்கையில் அமைதி முயற்சிகள் வெற்றி பெற்று நிரந்தரத் தீர்வொன்று கிடைப்பதற்கு இந்தியா முழுமையான ஒத்துழைப்பை

(14ஆம் பக்கம் பார்க்க)

## மலையகக் கட்சிகள் ஆளுந்தரப்போடு இழுபறி

கொழும்பு ,ஏப். 05

நடந்துமுடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஆளுங்கட்சியுடன் இணைந்து போட்டியிட்டு வெற்றிபெற்ற சில மலையகக் கட்சிகள் உள்ளூராட்சி மன்றங்களின் முக்கிய பொறுப்புகளைக் கோரி நிற்பதால் சிக்கல் நிலைமையொன்று ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கீழ் சில உள்ளூராட்சி மன்றங்களில் வெற்றியீட்டிய இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் மலையக மக்கள் முன்னணி என்பன அந்த மன்றங்களின் உயர்பதவிகள் தமக்குக் கிடைக்க வேண்டுமென்று வலியுறுத்தி வருகின்றன எனத் தெரிவிக்கின்றது.

ஆனாலும், இவ்வாறான உள்ளூராட்சி மன்றங்களில் ஆளுங்கட்சியின் வேட்பாளர்

(14ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சிக் கடற்பரப்பில் கைதான திருமலை மீனவர்கள் கொழும்புக்கு

கரவெட்டி,ஏப்.5

கடந்தமாதம் 21ஆம் திகதி வடமராட்சிக் கடற்பரப்பில் வைத்துக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டவர்களான திருகோணமலை மீனவர்கள் ஐவரும் மேலதிக விசாரணைக்காகக் கொழும்புக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளனர் என்று மீனவர் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்கள் விடுதலைப் புலிகள் என்றும் - படகில் ஆயுதங்களைக் கடத்தினார்கள் என்ற பெயரிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்றும் - முன்னர் படைத்தரப்பினர் தெரிவித்திருந்தனர். ஆனால், இவர்களுக்கும் தமக்கும் எவ்விதத் தொடர்புமில்லை என்றும் விடுதலைப் புலிகள் மறுத்திருந்தனர்.

இதற்கிடையில், ஐந்து மீனவர்களில் மூவரின் குடும்பத்தினர் இவர்களைச் சந்திப்பதற்காக திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

# வீரமும் விவேகமுமான தலைமுறையே தேசியத் தலைவர் பிரபாவின் எதிர்பார்ப்பு

## உலக உதைபந்தாட்ட சங்கத் தலைவருக்கு பாப்பா விசேட செய்தி

கிளிநொச்சி,ஏப்.5

வீரமும் விவேகமுமான தலைமுறை உருவாகவேண்டும் என்பதே தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் எதிர்பார்ப்பாகும்.

உலக உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவர் ஜோசப் பிளாட்டருக்கு தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா அனுப்பிய விசேட செய்தியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எங்கள் இளைய தலைமுறை சிறப்பான ஒரு வாழ்வைப் பெறவேண்டும். ஒவ்வொரு இளைஞனும் வீரமும் விவேகமுமான தலைமுறையாக உருவாகவேண்டும். இதுவே எங்கள் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் எதிர்பார்ப்பாகும். அவர் உதைபந்தாட்டத்தின்மீது பெரும் ஈடுபாடுடையவர். எங்கள் போராட்டத்தின் அடித்தளமே எதிர்காலத் தலைமுறையின் மகிழ்ச்சியான வாழ்வும் எமது மக்களின் கௌரவத்துடன் கூடிய அமைதியான இருப்பும் நோக்கிய பயணமாகிறது.

கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலான யுத்தத்தினால் எமது மக்கள் நிறைய துயரத்தை அனுபவித்துள்ளார்கள். அக்காலங்களில் உதைபந்தாட்டமும் அவர்களின் மன அழுத்தத்தை மாற்றும் மருந்தாக அமைந்திருந்தது. மக்கள் மீதான தொடர்ச்சியான குண்டு வீச்சும் ஷெல்தாக்குதல்களும் உதைபந்தாட்டத்தில் ஈடுபடுவதன்மூலம் கிடைத்த மகிழ்ச்சியைத் தடுக்க முடியவில்லை. உரிய காலணி இன்றி வெறும் கால்களுடன் வசதிகள் எதுவும் இன்றியும் உதைபந்தாட்டம் எமது மண்ணில் தொடர்ந்தது. 2002 பெப்ரவரி கைச்சாத்தான யுத்த நிறுத்த ஒப்பந்தம் வரை 10 ஆண்டுகளுக்கு மேலாக கடுமையான பொருளாதாரத்தடை எம்மக்கள்மீது சுமத்தப்பட்டிருந்தது. விளையாட்டு உபகரணங்களும் இதற்கு விதி விலக்காகவில்லை.

இப்போது வடக்கு-கிழக்குப் பகுதியில் 8 உதைபந்தாட்டப் பயிற்சி நிலையங்களுக்கு சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் நிதியுதவி கிடைக்கிறது. இதற்காக உங்களுக்கு எங்கள் மக்கள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். தற்போது வடக்கு - கிழக்கு உதைபந்தாட்ட அபிவிருத்திச் சங்கம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு தமிழர் தாயகத்தில் உதைபந்தாட்டத்தை வளர்த்தெடுக்க உதவும்படி வேண்டுகிறேன்.

- இவ்வாறு விளையாட்டுத்துறைப் பொறுப்பாளரின் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உதைபந்தாட்டப் பயிற்சி நிலையங்களை அமைப்பதற்கான செயற்திட்டத்தைக் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் களுத்துறையில் இடம்பெற்றது. இதில் தமிழீழ விளையாட்டுத்துறையின் பிரதிநிதி கலாநிதி நாகலிங்கம் எதிர்வீரசிங்கம், தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளரின் விசேட செய்தியை வாசித்து ஜோசப் பிளாட்டரிடம் வழங்கினார். அத்துடன், விடுதலைப் புலிகள் சார்பில் நினைவுப் பரிசையும் அவர் ஜோசப் பிளாட்டருக்கு வழங்கினார். (ஒ)

# தியான மண்டபம் நாளை திறப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.5


உடுவில் கேன் புற்றுநோயாளர் காப்பகத்தில் தியான மண்டபம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு திறந்துவைக்கப்படவுள்ளது.

பிரிட்டனில் பணிபுரிபவரான டாக்டர் ஜெயந்தன் நமசிவாயம் தியான மண்டபத்தைத் திறந்துவைப்பார். திறப்புவிழாவைத் தொடர்ந்து காப்பக மேம்பாடு குறித்த கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது. (ஒ)

# 'தோலகட்டி முனிவர்' தோமஸ் புனிதர்நிலைக்கு தெரிவாகுவார்?

யாழ்ப்பாணம்,ஏப்.5

தோலகட்டி முனிவர் எனப் போற்றப்படும் வண. தோமஸ் அடிகளாருக்குப் புனிதர் பட்டம் வழங்குவதற்கான ஆயத்த ஏற்பாடுகள் - ஆய்வுகள் - மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.




இதற்காக அவரை அறிந்தவர்கள் சாட்சியம் கூற வசதி செய்யப்பட்டுள்ளது. சாட்சியம் கூறுவோரை நாளை வியாழக்கிழமை காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை யாழ். ஆயர் இல்லத்திற்கு வருகைதருமாறு அருள் ஆச்சிரம அதிபர் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அருள் ஆச்சிரமம் அவரைப்பற்றி விடுத்துள்ள குறிப்பு வருமாறு:-

தோலகட்டி முனிவர் எனப்போற்றப்படும் வண. தோமஸ் அடிகளார் 1886ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலுள்ள பாண்டியன்தாழ்வு என்னும் இடத்தில் பிறந்து 1928இல் தோலகட்டி ஆச்சிரமத்தை நிறுவி இதன் கிளை மடங்கள் இந்தியாவிலும் இலங்கையிலும் பரவ வழிவகுத்து 1964 ஜனவரி 26ஆம் திகதி இறைபதம் அடைந்தார்.

இவுரின் வாழ்வு அநேக பணிகளைத் தன்னுள் கொண்டதாகும். குறிப்பாக ஏழை, எளிய மக்கள் புதுவாழ்வு காணவும் அக்காலத்தின் சாதிக்கொடுமைகள், மதவேற்றுமைகள் ஒழிந்து அனைவரும் ஒரே இறைவனின் மக்கள் என்ற ஒற்றுமையோடு வாழ வழிகாட்டியவர்.

அனைத்துப் பணிகளுக்கும் மேலாக இவரின் வாழ்வு தியானயோக நிலையில் முற்றும் முழுதும் இறைவனில் ஒன்றித்த செப, தவ, உபவாச, தியாக வாழ்வாகத் திகழ்ந்தது. நம் நாட்டு மக்களுக்காகவும் அனைத்து உலக மக்களுக்காகவும் என்றும் இறைவனை இறைஞ்சிய வாழ்வாகத் திகழ்ந்தது.

அவருடைய இந்த இறை அன்பும் பிறர் அன்பும் நிறைந்த வாழ்வை அறிந்த ரோமில் உள்ள தலைமைப் பீடமானது இவரைப் புனிதர் நிலைக்கு உயர்த்த ஆய்வுகளை ஆரம்பிக்கலாம் என்று யாழ். மறைமாவட்ட ஆயர் அதிவண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகைக்கு அறிவித்துள்ளது.

இந்த ஆய்வுகளின் ஓர் பகுதியாக வண. தோமஸ் அடிகளாரை அறிந்த அனைவரும் இன, மத, வேறுபாடின்றி அவரின் வாழ்வு பற்றி சாட்சியம் கூற அழைக்கப்பட்டுள்ளனர்.

மேலதிக தகவலுக்கும் தொடர்புகளுக்கும் 'அதிபர்' அருள் ஆச்சிரமம், இல.5, கோயில் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடனோ, 021 222 3351 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்புகொள்ளுமாறு அருள் ஆச்சிரமம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-202)

# பாடநூல்கள் இன்றி மாணவர் சிரமம்

தென்மராட்சி,ஏப்.5

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் தரம் 8 வகுப்பு மாணவர்களுக்கான தமிழ், கணிதம் ஆகிய பாடநூல்கள் பாடசாலைகள் ஆரம்பித்து நான்கு மாதங்களாகியும் கிடைக்காததால் மாணவர்களின் கல்வி நிலை பாதிப்படைந்துள்ளதாகப் பெற்றோர் தெரிவித்தனர்.

கடந்த வருடம் தரம் 7 வகுப்பு மாணவர்களுக்கு தமிழ், கணிதம் ஆகிய பாடநூல்கள் வராத காரணத்தால் கஷ்டத்தின் மத்தியில் கல்வி கற்றனர்.

அந்த மாணவர்களுக்கு இந்த வருடமும் உரிய புத்தகங்கள் இதுவரை வழங்கப்படவில்லை. கடந்தவாரம் ஒரு தொகுதி பாடநூல்கள் கல்வி வலயத்திற்கு வந்தபோதிலும் தரம் 8 வகுப்பு மாணவர்களுக்கான தமிழ், கணிதம் ஆகிய பாடநூல்கள் வரவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

# கொமர்ஷல் வங்கியின் வாடிக்கையாளர் சேவை நிலைய திறப்பு விழா




யாழ்.நகரில் ஸ்ரான்லி வீதியில் கொமர்ஷல் வங்கியின் வாடிக்கையாளர் சேவை நிலையம் நேற்று வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

பிரமுகர்கள் மேளதாளத்துடன் ஊர்வலமாக அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கொமர்ஷல் வங்கியின் இலங்கைக்கான முகாமைத்துவப் பணிப்பாளர் அமித்த குணரட்ண நாடாவை வெட்டி கிளையினைத் திறந்து வைத்து புதிய வங்கிக்கணக்கு ஒன்றை ஆரம்பித்து வைப்பதையும் மங்களவிளக்கினை யாழ்.அரச அதிபர் கே.கணேஸ், ஸ்ரான்லி வீதிக் கிளையின் முகாமையாளர் அ.ம.அ.குபேரகுலேந்திரன் ஆகியோர் மங்கள விளக்கு ஏற்றுவதையும் வைபவத்தில் கலந்து கொண் டோர் மற்றும் வங்கியின் கட்டடத் தோற்றத்தையும் படங்களில் காணலாம். *(படங்கள்: ஒளி அதிரன்)*

# யாழ். திருமறைக் கலாமன்றில் 'பலிக்களம்' தவக்கால ஆற்றுகை இன்றுமுதல் 9ஆம் திகதிவரை!

யாழ்ப்பாணம்,ஏப்.5

யாழ். திருமறைக் கலாமன்றத்தால் ஆண்டுதோறும் மேடையேற்றப்படும் 'பலிக்களம்' தவக்கால ஆற்றுகை இன்று தொடக்கம் எதிர்வரும் 9ஆம் திகதிவரை தினமும் இரவு 7 மணிக்கு மன்ற அரங்கில் மேடையேறுகிறது.

இம்முறையும் இருநூறுக்கும் மேற்பட்ட கலைஞர்களின் நடிப்பில் பிரமாண்டமான ஒலி, ஒளி அமைப்புகள், மேடை அலங்காரங்களுடன் மேடையேறவிருக்கின்றது 'பலிக்களம்'.

திருமறைக் கலாமன்ற இயக்குநர் பேராசிரியர் நீ.மரியசேவியர் அடிகளாரின் எழுத்துரு நெறியாள்கையில் தயாரிக்கப்பட்டு 1970ஆம் ஆண்டு முதன் முதலாக மேடையேற்றப்பட்ட 'பலிக்களம்' ஆற்றுகை தொடர்ந்து வேறுபல மாவட்டங்களிலும் வெளிநாடுகளிலும் அரங்கேற்றப்பட்டது.

இம்முறை இந்த ஆற்றுகையை கலைஞர் ஏ.ஆர்.விஜயகுமார் நெறியாள்கை செய்கிறார்.

கிறிஸ்தவர்கள் மத்தியில் மட்டுமன்றி ஏனைய மதத்தவர்களாலும் விரும்பி, ரசித்துப் பார்க்கப்படுகின்ற 'பலிக்களம்' ஆற்றுகைக்கான முன்னேற்பாட்டுப் பணிகள் யாவும் பூர்த்தியடைந்துவிட்டன என்று திருமறைக் கலாமன்ற ஊடகப் பிரிவுத் தொடர்பாளர் செல்மர் எமில் நேற்றுமாலை தெரிவித்தார். (த-51)

# மூன்றுமாத காலமாக பிரேத அறையில் கைவிடப்பட்ட வயோதிபரின் சடலம்

## உறவினர்களைப் பொறுப்பேற்குமாறு அழைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.5

யாழ். மருத்துவமனையில் கடந்த ஜனவரி முதலாம் திகதி உயிரிழந்த வயோதிபர் ஒருவரது சடலம் கடந்த மூன்றுமாத காலமாக உறவினர்களால் பொறுப்பேற்கப்படாமல் மருத்துவமனையின் பிரேத அறையில் பராமரிக்கப்பட்டு வருவதாக மருத்துவமனைப் பொலீஸ் பிரிவு அறிவித்திருக்கின்றது.

பரந்தனைச் சேர்ந்தவர் என்று நம்பப்படும் சுமார் 70 வயது மதிக்கத்தக்க இந்த வயோதிபர் கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதி மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார் என்பது மருத்துவமனைப் பதிவேடுகளில் இருந்து தெரியவந்திருப்பதாகவும் -

அரியரட்ணம் லட்சுமணன் என்ற பெயர் பதிவில் காணப்படுவதாகவும் பொலீஸார் தெரிவித்திருக்கின்றனர்.

ஜனவரி முதலாம் திகதி உயிரிழந்த இவரது சடலத்தை உறவினர்கள் இருந்தால் உடனடியாக மருத்துவமனைப் பொலீஸ் பிரிவுடன் தொடர்புகொண்டு பொறுப்பேற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் – 222 2030, 222 2083, 222 3837.

# பலாலி விமானத்தள விஸ்தரிப்புக்காக பாதாளக் கிடங்காகும் காங்கேசன்

யாழ்.குடாநாட்டின் வலிகாமம் வடக்கில் அப்பாவி மக்களின் வளம் கொழிக்கும் பரம்பரைத் தாயகப் பிரதேசம் உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் இலங்கை அரச படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பது குறித்தும், அந்தப் பூர்வீகப் பூமியிலிருந்து வேரோடு மண்ணாய்ப் பிடுங்கி எறியப்பட்ட அந்த மக்கள் அரச உலர் உணவு நிவாரணத்தில் தங்கி நின்று அல்லல்பட்டு, அவலப்படுவது குறித்தும் நேற்று இப்பத்தியில் பிரஸ்தாபித்திருந்தோம்.

அந்த விவகாரத்தை ஒட்டி சைவ சமயப் பிரசாரகரான செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் கொழும்பில் நடந்த பொது நிகழ்வு ஒன்றில் விடுத்திருக்கும் எச்சரிக்கை, தமிழ் சமூகம் கூர்ந்து கவனிக்கவும், விரைந்து பதில் நடவடிக்கை எடுக்கவும் வேண்டிய அவசர விடயமாகின்றது.

காங்கேசன்துறையில் சிமெந்து ஆலையை நிறுவி, அங்கிருக்கும் வளத்தை - சுண்ணாம்புக் கல்லை - அகழ்ந்தெடுத்து, பெட்டி பெட்டியாக ரயிலிலும் பொதி, பொதியாக லொறியிலும் ஏற்றி தெற்கே அனுப்பிய காலம் ஒன்று இருந்தது.

யாழ்.குடாநாட்டின் வட கடலோரத்தில் அளவு கணக்கின்றி நிலம் அகழப்பட்டதால் கடல்நீர் குடாநாட்டுக்குள் புகவும், நிலத்தடி நீர் உவர்த்தன்மையாகி குடாநாட்டின் பசுமை வளமே பாதிப்புறவும் கூடிய பேராபத்துக் குறித்து அப்போது பல தரப்பினர்களினாலும் - நிபுணர்களினாலும் - எச்சரிக்கப்பட்டு வந்தது.

சுண்ணம்புக்கல் அகழும் வேலை இப்போது நடக்காததால் அந்தப் பேராபத்து தள்ளிப்போய்விட்டது என்றே பலரும் எண்ணினர். ஆனால், அது தவறு என்று எச்சரிக்கை மணி ஒலித்திருக்கிறார் ஆர்வலர் ஆறு. திருமுருகன்.

வரலாற்றுப் புகழ்மிக்க புனித ஸ்தலமான கீரிமலை தீர்த்தப் பகுதி மற்றும் நகுலேஸ்வரம் கோயில் ஆகியவற்றிலிருந்து காங்கேசன்துறை சிமெந்து ஆலை வரையான சுமார் மூன்று கிலோமீற்றர் நீளப் பாதையின் இரு மருங்கிலும் இரவு, பகலாக அகழ்வு வேலை துரிதமாக நடக்கின்றது என்ற தகவல் வெளியாகியிருக்கின்றது. உயர் பாதுகாப்புவலயம் என்ற பெயரில் அரசுப்படைகள் கபளீகரம் செய்து பொதுமக்கள் பிரவேசிக்கமுடியாமல் கட்டுக்காவல்போட்டு மூடி வைத்திருக்கும் பிரதேசத்திற்குள் உள்ள இடம் இது. வீதியின் இரு மருங்கிலும் பாதாளக்கிடங்குகள் அளவுக்குத் தோண்டி, கற்களை எடுத்துச் சென்று பலாலி விமானத்தள ஓடுபாதை புனரமைப்பு மற்றும் விஸ்தரிப்பு வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சிலமாதங்களில் - அல்லது சிலவாரங்களில் - பலாலி விமானத்தளம், பாரிய விமானங்கள் தரையிறங்கக்கூடிய விசால நிலைமைக்கு - அரசின் இராணுவ நோக்கங்களை நிறைவு செய்யத்தக்கவகையில் - விஸ்தரிக்கப்பட்டு தரம் உயர்த்தப்பட்டு விடும். ஆனால், கீரிமலைக்கும், காங்கேசனுக்கும் இடையில் தோண்டப்பட்டிருக்கும் பாதாள பள்ளத்துக்குள் கடல்நீர் புகுந்து குடாநாட்டின் சுற்றுப்புறச் சூழலே சீரழிந்து விடும்.

கொழும்பில் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பொன்விழாவை ஒட்டிய கருத்தரங்கு நிகழ்வில் உரையாற்றிய ஆறு. திருமுருகன் இந்தப் பேராபத்துச் சூழ்ந்து வருவது குறித்து எச்சரிக்கை விடுத்தார். பொதுமக்கள் எட்டமுடியாதவாறு இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் இப்பகுதிக்குள் இவ்வாறு தாயக மண்ணையும் சுற்றுப்புறச் சூழலையும் கெடுக்கும் விதத்தில் ஒளிவு மறைவாக நடக்கும் நாசச் செயலைத் தடுத்து நிறுத்த அகில இலங்கை இந்து மாமன்றம் போன்ற பொது அமைப்புகள் முன்வரவேண்டும் என்றும் அவர் அங்கு கோரிக்கை விடுத்தார்.

ஏற்கனவே, யாழ். குடாநாட்டின் பெருஞ் சொத்தான- பூலோக கற்பகதரு என்று வர்ணிக்கப்படுகின்ற - பனை வளம், படையினரின் அடாவடித்தனத்தால் பேரழிவுக்கு உள்ளாகியுள்ளது. ஆண்டாண்டு காலம் நிமிர்ந்துநின்று, குடாநாட்டுக்கு வளம் சேர்த்த பனைகள், பாதுகாப்புக் காவலரண்கள் அமைக்கும் தேவைக்காக லட்சக்கணக்கில் தறித்துத் தள்ளப்பட்டன. பனை வளத்தை குடாநாடு இழக்கும் மோசமான நிலைமை.

மறுபுறத்தில், மேற்குக் கரையில் கடலின் கீழான எரிபொருள் ஆய்வு என்ற திட்டத்தின் கீழ் - மன்னாருக்கு அப்பால் - தமிழர் தாயகத்தின் கனியவளத்தைச் சூறையாடும் திட்டம் மெல்ல மெல்ல விரிகின்றது.

வடக்கின் கடல் சூழ்ந்த கரைப் பிரதேசத்திலிருந்து கடற்றொழில் செய்வதற்கு அப்பகுதி மீனவர்களுக்குக் கட்டுப்பாடு – கெடுபிடி. இதனால், வடக்குக் கடலின் மீன் வளத்தை வேறு யார்யாரோ கொள்ளையிட்டு அள்ளிச் செல்லும் அவலம்.

ஈழத் தமிழர்கள், தம் தாயக நலனைத் தாங்களே கவனித்துப் பேணக்கூடிய அதிகாரத்தைப் பெறும்வரை - அதற்கான அரசியல் முறைமை உருவாகும்வரை - அந்நியத் தரப்புகளின் இத்தகைய அழிவு வேலைகளைத் தடுத்து நிறுத்துவது இலகுவானதல்ல. கடந்த காலப்பட்டறிவு தரும் பாடம் இதுதான்.

தமிழர் தாயக மண்ணையும் அதன் சுற்றுப்புறச் சூழலையும் நாசமாக்கும் இத்தகைய செயற்பாடுகள், தமது உரிமைக்கான போராட்டத்தைத் தமிழர் தரப்பு துரிதப்படுத்த வேண்டியதற்கான நியாயத்தை - காரணத்தை - அவர்களுக்கு வலுவாக எடுத்து உணர்த்துகின்றன.

# குடாநாட்டில் நீர் மாசடைவது குறித்து ஆராய்ந்து அறிக்கைதர விசேட குழு

## யாழ். அரச அதிபர் தகவல்

யாழ்ப்பாணம்,ஏப்.5

குடநாட்டில் நீர்ப்பாவனை, நீர் மாசடைதல் மற்றும் நிலத்தடி நீர் உவராதல் என்பன குறித்து ஆராய்வதற்காக பல தரப்பையும் கொண்ட குழுவொன்று அமைக்கப்படவுள்ளது.

இது தொடர்பாக யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் உதயனுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்:-

கடந்த 16ஆம் திகதி நடைபெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலும் அண்மையில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும் இந்த விவகாரங்கள் குறித்து ஆராயப்பட்டதுடன் தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனத்தினர், துறைசார் நிபுணர்கள், யாழ். பல்கலைக்கழகத்தினர், விவசாய சம்மேளனத்தினர் ஆகியோரை உள்ளடக்கியதாக இந்தக் குழு அமைக்கப்படவுள்ளது.

இரணைமடுக் குளத்திலிருந்து யாழ்.குடாநாட்டிற்கு குடி தண்ணீர் விநியோகிப்பது தொடர்பாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட குழு சில சிபார்சுகளை செய்துள்ளது.

இந்த சிபார்சுகளையும் குடாநாட்டில் அமைக்கப்படவுள்ள குழுவின் சிபார்சுகளையும் வைத்தே எதிர்காலத்தில் குடிதண்ணீர் விநியோகம் தொடர்பான முக்கிய முடிவுகள் எடுக்கப்படும்.

மிக விரைவில் இந்தக் குழுக்களுக்கிடையிலான சந்திப்பொன்று நடைபெறவுள்ளது என்று தெரிவித்தார்.

(த-202)(27)

# கொமர்ஷல் வங்கி வாடிக்கையாளர் சேவை நிலையம் நகரில் திறப்பு

யாழ்ப்பாணம், ஏப்.5

யாழ்.நகரில் ஸ்ரான்லி வீதியில்- முன்னர் தபாலகம் அமைந்திருந்த கட்டடத்தில் - நிறுவப்பட்ட கொமர்ஷல் வங்கியின் வாடிக்கையாளர் சேவை நிலையம் நேற்றுக்காலை வைபவ ரீதியாகத் திறந்துவைக்கப்பட்டது. காலை 9 மணிக்கு சுபநேரத்தில் சேவை நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

முன்னதாக விருந்தினர்கள் மற்றும் வங்கிச் சமூகத்தினர் மேளதாளங்களுடன் வங்கிக்கட்டடம் அமைந்துள்ள இடத்துக்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கொமர்ஷல் வங்கியின் இலங்கைக்கான முகாமைத்துவப் பணிப்பாளர் அமித்த குணரட்ண நாடாவெட்டி சேவை நிலையத்தைத் திறந்துவைத்தார்.

அதன் பின்னர் நடைபெற்ற நிகழ்வுகளுக்கு ஸ்ரான்லி வீதிக் கிளையின் முகாமையாளர் அ.ம.அ.குபேரகுலேந்திரன் தலைமைவகித்தார்.

மங்கள விளக்கினை யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், கொமர்ஷல் வங்கியின் வடக்கு-கிழக்குப் பிராந்திய முகாமையாளர் செல்வராஜா சூரிய உட்பட பல பிரமுகர்கள் ஏற்றினர்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், வண.பிதா றெஜி ராஜேஸ்வரன் ஆகியோர் ஆசியுரைகளை வழங்கினர்.

அதனைத் தொடர்ந்து புதிய வங்கிக் கணக்குகளை கொமர்ஷல் வங்கியின் இலங்கைக்கான முகாமைத்துவப் பணிப்பாளர் அமித்த குணரட்ண சம்பிரதாயபூர்வமாக வாடிக்கையாளர்களுக்குத் தொடக்கிவைத்தார். இந்த நிகழ்வில் வங்கி வாடிக்கையாளர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

(ஐ-7)(26)

# பாதிக்கப்பட்டோருக்கான வீடமைப்புப் பணிகள் ஒக்ரோபருக்குள் பூர்த்தியாக்கப்பட வேண்டும்!

## பொறுப்பேற்ற நிறுவனங்களுக்கு அரச அதிபர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஏப்.5

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அமைக்கப்பட்டுவரும் வீட்டுத் திட்டப் பணிகள் யாவும் எதிர்வரும் ஒக்ரோபர் 31ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தியாக்கப்பட வேண்டும்.

இவ்வாறு வீட்டுத் திட்டப் பணிகளை மேற்கொள்ளும் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு யாழ். அரச அதிபர் கே.கணேஷ் அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அரச அதிபர் மேலும் தெரிவிக்கையில்:-

யாழ்.மாவட்டத்தில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென 9 ஆயிரத்து 140 வீடுகள் அமைத்துக் கொடுக்க வேண்டிய தேவையுள்ளது.

தற்போது ஆயிரத்து 364 வீடுகள் அமைக்கப்படுகின்றன. 5 ஆயிரத்து 197 வீடுகளை அமைக்கும் பணிகளுக்கான ஆயத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன.

மிகுதியாகவுள்ள 2 ஆயிரத்து 579 வீடுகளை அமைக்கும் பணிகளை சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் உடன் ஆரம்பிக்க வேண்டும். இல்லையெனில் அந்த வீடமைக்கும் பொறுப்பை வேறு நிறுவனங்களிடம் வழங்க ஆலோசிக்கப்படுகின்றது.

இந்த மாத முடிவுக்குள் சகல வீடுகளுக்கும் அத்திபாரம் போடப்பட்டிருக்க வேண்டும். அத்துடன், இந்த மாத இறுதிக்குள் 2 ஆயிரத்து 500 வீடுகள் பூர்த்திசெய்யப்பட்டு கையளிக்கப்படும் என இலக்கு வைக்கப்பட்டுள்ளது - என்று தெரிவித்தார்.

(த-202)(25)


### நாளை

பங்குனி 23
வியாழக்கிழமை
06.04.2006
திதி : அட்டமி
முற்பகல் 10.21
நட்சத்திரம் : புனர்பூசம்
முன்னிரவு : 07.57
சுபநேரம் : 07.38 - 09.08
ராகுகாலம் : 01.38 - 03.08
(யாவும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

எண்ணங்களை மனிதர் எண்ணலாம். ஆனால், எதற்கும் முடிவு கூறுபவர் ஆண்டவர்.

- சாலமோனின் நீதிமொழி.





## அருள்மிகு யாழ்-அத்தியடி பிள்ளையார் கோயில்
## மஹோற்சவம் - 2006

பங்குனித்திங்கள் 23ஆம் நாள் (06.04.2006) வியாழக் கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாக திருவருள் கூடியுள்ளது.

**தொடர்ந்து நடைபெறும் முக்கிய நிகழ்வுகள்**

**சப்பரத்திருவிழா:** 13.04.2006 வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு ஆரம்பமாகும்.

**தேர்த்திருவிழா:** 14.04.2006 வெள்ளிக்கிழமை புதுவருடப் பிறப்பன்று காலை 8.15 மணிக்கு வசந்த மண்டப பூசை நடைபெற்று, தொடர்ந்து 9.30 மணிக்கு தேர்ப்பவனி ஆரம்பமாகும்.

* விய வருஷப் பிறப்பு விஷேட பூசை 14.04.2006 வெள்ளிக் கிழமை அதிகாலை 4.31 மணிக்கு நடைபெறும்.

**தீர்த்தம்:** 15.04.2006 சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

**வசந்தோற்சவம்:** 16.04.2006 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும்.

* உற்சவ தினங்களில் அன்னதான நிகழ்வு கணபதி கலாசார மண்டபத்தில் இடம்பெறும்.
* மஹோற்சவ குருக்கள்:

சிவாச்சாரியமணி சிவஸ்ரீ நா.யோகேஸ்வரக் குருக்கள்

நல்லாசியுடன்:

பிரம்மஸ்ரீ யோ.பிரபாகரக்குருக்கள்

-பிள்ளையார் பணியில் கோயில் நிர்வாகம்.

(48966)(32-16-15)

## யாழ்.மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

### ஆண்டுப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் - 2006

காலம்: 09-04-2006 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணி
இடம்: சங்கப்பணிமனை
தலைமை: திரு.இ.அரிகரன் அவர்கள்
சகல அங்கத்துவர்களும் குறித்த நேரத்தில் தவறாது சமுகம் தரவும்.

215, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம். (48973)(32-16-15)

க.சின்னத்தம்பி,
கௌரவ செயலாளர்.

## கண்ணீர்க் காணிக்கை



எனது குருநாதரான
**ஓவியர் மணியம்**
அவர்கள் காலமானதையிட்டு நான் பெரிதும் துயுருறுகின்றேன்.

என்னை ஆளாக்கிய அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய நல்லைக் கந்தனின் பாதாரவிந்தங்களைப் பணிகின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

-ஓவியக் கலைஞன்,
ச.ஞானகுருபரன் (ஞானகுரு ஆட்ஸ்).

(48975)(26-32-15-16)

## 'சிங்கர்' காட்சியறையில் திருட்டு

தென்மராட்சி,ஏப்.5

சாவகச்சேரியில் உள்ள சிங்கர் நிறுவனக் காட்சியறை கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு திருடர்களின் கைவரிசைக்கு இலக்கானது.

காட்சியறையின் பின் கதவினை உடைத்து உள் நுழைந்த திருடர்கள் குளிர்சாதனப் பெட்டிகள் உட்பட சுமார் இரண்டு லட்சம் ரூபா பெறு மதியான பொருள்களைத் திருடிச்சென்றுள்ளனர்.

இத்திருட்டுத் தொடர்பாக சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117) (24)

## நலன்புரிச் சங்க வருடாந்த ஒன்றுகூடல்

தென்மராட்சி,ஏப்.5

சாவகச்சேரி நகரசபை ஊழியர் நலன் புரிச் சங்கத்தின் 27ஆவது வருடாந்த பொதுக்கூட்டமும் ஒன்றுகூடலும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நகரசபை கேட்போர் கூடத்தில் சங்கத் தலைவர் திருமதி குணமணிதேவி தலைமையில் நடைபெறும்.

சங்க உறுப்பினர்களின் கலை நிகழ்வுகளும் அதில் இடம்பெறும்.

(ஐ-117) (24)

## மீசாலை விக்னேஸ்வராவில் திறப்பு விழா

தென்மராட்சி,ஏப்.5

மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தில் சுவிஸ் அபிவிருத்திக் கூட்டு முகவர் நிறுவனத்தினரால் அமைக்கப்பட்ட கட்டடங்களின் திறப்பு விழா நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிறுவனத்தினரால் வித்தியாலயத்திற்கு இரு மாடிக் கட்டடம் மற்றும் நீர்த்தாங்கி, குடிதண்ணீர் வசதி, மதில், நுழைவாயில் போன்றவை அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளன. அத்துடன், சேதமடைந்த நான்கு வகுப்பறைக் கட்டடங்களும் புனரமைக்கப்பட்டுள்ளன.

வித்தியாலய அதிபர் கு.கதிர்காமசேகரர் தலைமையில் நடைபெறும் திறப்பு விழாவில் முதன்மை விருந்தினராக சுவிஸ் அபிவிருத்திக் கூட்டுமுகவர் நிறுவனத்தின் யாழ்.அலுவலக தலைமைப் பணிப்பாளர் ரூடுல்ப் பஸ்காஸ்ஸரும் சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் நிறுவனப் பொறியியலாளர் எஸ்.குகநாதன், பாடசாலை வேலைகள் பொறியியலாளர் கே.சிவாபாலன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

(ஐ-117)(32)


## தேவை

எமது நிறுவனத்தில் சோடாப் பெட்டிகளை ஏற்றி இறக்குவதற்கு கூலியாள்கள் தேவை.
உடன் தொடர்பு கொள்ளவும்:
**பிள்ளையார் ஸ்ரோர்ஸ்,**
ஒஸ்மானியாக் கல்லூரி வீதி,
ஒட்டுமடம், யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 4590008

(48974)(26.32.16.15)


## மரண அறிவித்தல்கள்

### சிதம்பரப்பிள்ளை இராஜேஸ்வரி



புங்குடுதீவு, 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை இராஜேஸ்வரி அவர்கள் நேற்று (04.04.2006) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை (முன்னாள் மலேசியா பென்சினியர்) - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சச்சிதானந்தசிவம் மற்றும் கமலானந்தன், யோகானந்தன் (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் புனிதவதி, அருட்செல்வி, கிருஷா ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்ற சுப்பிரமணிம் மற்றும் தம்பிப்பிள்ளை (U.K.) ஆகியோரின் பெறாமகளும் ஸ்ரீரங்கம், தங்கமுத்து, இரத்தினம் ஆகியோரின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.04.2006) புதன்கிழமை இல.07, பாரதி லேன், அரியாலை என்ற முகவரியிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சிந்துப்பாத்தி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாரதிலேன்,
அரியாலை. (48970)(32-15-16)

தகவல்:
யோகானந்தசிவம் (சந்திரன்).

### நாகேசு இராஜேந்திரம் (வாசு)

நயினாதீவு, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் டென்மார்க்கை வதிவிடமாகவும் கொண்ட நாகேசு இராஜேந்திரம் அவர்கள் 03.04.2006 திங்கட்கிழமை டென்மார்க்கில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகேசு, சின்னத்தங்கச்சி தம்பதியரின் ஏகபுதல்வனும் முத்தையா, காலஞ்சென்ற சௌந்தரம் தம்பதியரின் அன்பு மருமகனும் வசந்தமலர் (டென்மார்க்) அவர்களின் அன்புக் கணவரும் சாரங்கன், பாருதி, பானுஜா (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் டென்மார்க்கில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.55/44, கல்லூரி ஒழுங்கை,
நீராவியடி, யாழ்ப்பாணம்.
(48972)(32-16-15)

தகவல்:
குடும்பத்தினர், மு.சிவபாலன்
(மைத்துனர்),
அஞ்சல் அலுவலகம், யாழ்ப்பாணம்.


324, Palaly Road, Jaffna.

தகவல் தொழில் நுட்பத்தில் நீங்களும்

BIT



## கொழும்பு பல்கலைக்கழகத்தின்
வெளிவாரிப் பட்டப்படிப்பு
## விஞ்ஞானமாணி-தகவல் தொழில்நுட்பம்

- கற்கை நெறிகள் MCS நிறுவனத்தில் நடைபெறும்.
- தெரிவுப்பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புக்கள் பிரிவு I, 15 ஏப்ரல் 12 மணிக்கு ஆரம்பம்.
- பரீட்சைகள் கொழும்பு பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும்.
- விண்ணப்பிப்போர் O/Lஇல் கணிதபாடத்தில் Cதகைமையுடன் A/Lஇல் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
  *(O/Lஇல் C தகைமை பெறாதோர் A/Lஇல் பின்வரும் பாடங்களில் ஏதேனும் ஒன்றில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும். A/L-Bio, A/L-Maths, Economics, Logic, Commerce, Accounts, Business Statistics, Geography)
  *A/L 2006 பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம், ஆயினும் பெறுபேறுகளின்போது மேற்குறித்த தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- கற்கை நெறிக்கான மாணவர்கள் தெரிவுப்பரீட்சை ஒன்றின் மூலமே தெரிவு செய்யப்படுவர்.
- தெரிவுப் பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புக்கள் MCS நிறுவனத்தில் நடைபெறும்.
- கற்கை நெறியில் முதல் ஆண்டைப் பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு கொழும்பு பல்கலைக்கழகத்தின் சான்றிதழ் வழங்கப்படும். (Certificate in Information Technology)
- கற்கைநெறி முழுவதனையும் பூர்த்தி செய்வதன் மூலம் நீங்களும் ஒரு கணனிப் பட்டதாரியாகலாம்.
- எந்தவொரு பல்கலைக்கழக மாணவர்களும் **BIT** கற்கைநெறியைப் பயில்வதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.
- **BIT** கற்கை நெறியினை பயிலும் மாணவர்களுக்கு சுவீடன் பல்கலைக்கழகத்தில் **Djploma** கற்கைநெறியினை பயிலும் சந்தர்ப்பம்.
- **BIT** கற்கை நெறியினை பயிலும் மாணவர்களுக்கு MCS நிறுவனத்தின் **Diploma in Information Techonology** சான்றிதழ் பெறும் சந்தர்ப்பம்.
- **Microsoft** நிறுவனத்தின் **Computer Engineer** கற்கை நெறிக்கு 50% சலுகைக் கட்டணம்.

**விண்ணப்ப முடிவுத் திகதி : 10-04-2006**
**விண்ணப்பப் படிவங்களிற்கும் மேலதிக விபரங்களிற்கும், நேரில் MCS, 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.**

Supported by United Nation Development Project/Jaffna Rehabilitation & Resettlement Project



ஜெய்குருதேவ்



## உலகப் புகழ்பெற்ற ஆன்மீகக் குரு
தவத்திரு
## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்
அவர்களின்
## மகா சத்சங்கம்

(கானம், தியானம், ஞானம் இவைகள் சங்கமிக்கும் ஓர் இனிய மாலைப்பொழுது)

நாள்: 07.04.2006 வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணி
இடம்: யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானம்.

30 லட்சம் மக்கள் கலந்துகொண்ட வாழும் கலை நிறுவனத்தின் வெள்ளி விழா நிகழ்ச்சிக்குப் பிறகு குருஜி கலந்துகொள்ளும் முதல் சத்சங்கம். அரிய வாய்ப்பைத் தவறவிடாதீர்கள்!!

**ஜாதி, மத, இன பாகுபாடின்றி அனைவரும் குடும்பசகிதம் வருக! அருளாசி பெறுக!!**

அன்பில் மலருங்கள்! உங்களை உணருங்கள்!

**அனுமதி இலவசம்**

**சர்வதேச வாழும் கலை அறநிறுவனம், யாழ்ப்பாணம்.**
**தொ.பே.: 0779059549, 0779059544**

உலக சமாதான குருவே வருக! வருக!!
உங்களை அன்புடன் வரவேற்கும்.

**சீமாட்டி** புடவைக்கடல்
அனைத்துப் புடவைகளின் மொத்த சில்லறை வியாபாரிகள்,
No.122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021-222 2196 Fax: 021 222 2102

(48980)

# பாடுமீன் விளையாட்டுக் கழகம் யாழ். பிரதேச சம்பியனானது

யாழ்ப்பாணம்,ஏப்.5

யாழ். பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கான ஆண்களுக்கான எல்லே சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் பாடுமீன் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது.

கடந்த சனிக்கிழமை யாழ்.பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பாடுமீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.

பாடுமீன் விளையாட்டுக் கழகம் 4:0 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்றது. இப்போட்டியில் சிறந்த வீரனாக பாடுமீன் விளையாட்டுக் கழகத்தை சேர்ந்த எஸ். மது தெரிவுசெய்யப்பட்டார். (3-190)(32)



தென்மராட்சிக் கல்வி வலய மட்டத்தில் இடம்பெற்ற 15 வயதுப் பெண்கள் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் கச்சாய் அ.த.க. பாடசாலை அணி வலயச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

வலைப்பந்தாட்ட அணியினரையும் பயிற்றுவித்த ஆசிரியர்களான திருமதி சி.திருப்பதி, திருமதி சி.சிவராசா, திருமதி தே.சுரேஷ்கரன் ஆகியோருடன் பாடசாலை அதிபர் கே.மங்களேஸ்வரனையும் படத்தில் காணலாம்.

(3-203) (24)

# யாழ். பிரதேச கரபந்தாட்டம் பமிலியன்ஸ் வி.க. சம்பியன்

யாழ்ப்பாணம்,ஏப்.5

யாழ். பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கான பெண்களுக்கான கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் பமிலியன்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று சம்பியனானது.

கடந்த சனிக்கிழ்மை கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பமிலியன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து போர்த்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் மோதியது.

பமிலியன்ஸ விளையாட்டுக்கழகம் 3:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று வெற்றிக்கிண்ணத்தைத் தனதாக்கிக்கொண்டது.

இப்போட்டியில் சிறந்த வீராங்கனையாக பமிலியன்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த றெமீன்ர தெரிவுசெய்யப்பட்டார். (3-190) (24)

# ஸ்கந்தா வீரர்கள் கௌரவிப்பு

ஸ்கந்தபுரம்,ஏப்.5


கடந்த ஏழு வருடங்களாக மென்பந்துப் போட்டிகளில் வெற்றி பெற்ற ஸ்கந்தா விளையாட்டுக்கழக வீரர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் கரைச்சிப் பிரதேச செயலக உப பணிமனையில் நடைபெற்றது.

கரைச்சிப் பிரதேச செயலக உபபணிமனைப் பொறுப்பு அலுவலர் க.மகேந்திரனின் ஒழுங்குபடுத்தலில் சமாதான நீதவான் ச. கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஏழு மென்பந்து வீரர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

அக்கராயன் ப.நோ.கூ. சங்கத் தலைவர் வே.விஜயரட்ணத்தால் வீரர்களுக்கு வழங்கப்பட்ட அன்பளிப்புப் பொருள்கள் கையளிக்கப்பட்டன.

நிகழ்வில் அரசியல்துறைப் பொறுப்பாளர், அக்கராயன் பிரதேச ஊரக மேம்பாட்டுப் பேரவையினர், கழக உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பெரும்பாலானோர் கலந்து கொண்டனர்.

(3-381-203)(32)



அக்கராயன் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் திருமாறன் வீரர் ஒருவருக்குக் கேடயம் வழங்கிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். (படம்:ஸ்கந்தபுரம் செய்தியாளர்)

## எல்லே போட்டி

யாழ்ப்பாணம்,ஏப்.5

யாழ். பிரதேச செயலகப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்குரிய எல்லே போட்டி எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 9 மணியளவில் யாழ். பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகின்றது. இந்தப் போட்டியில் 6 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றுகின்றன. (ஐ -190)(24)

## வலைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.5

யாழ். பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் பாடுமீன் வி.கவும் குருநகர் வி.கவும் மோதுகின்றன. (3-190)(24)

## கிரிக்கெட் ஆட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.5

யாழ். பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடைபெற்றுவரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல். 4 மணிக்கு ஈச்சமோட்டை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் பாடுமீன் விளையாட்டுக் கழகமும் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன. (3-190)(24)



## வலுவிழந்தோருக்கான சைக்கிள் ஓட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.5

மிதிவெடி செயற்பாட்டின் விழிப்புணர்வுக்கும் பங்களிப்புக்குமான சர்வதேச தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலகம் யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்துடன் இணைந்து மிதிவெடியால் பாதிக்கப்பட்ட ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியை நடத்தியது.

அந்தப் போட்டியில் வெற்றிபெற்றோரின் விவரங்கள் வருமாறு:-

- முழங்காலிற்கு கீழ் - லோறன் ஜெயக்குமார், வீரசிங்கம் விக்கினேஸ்வரன், இளவன் கிருஸ்ணமூர்த்தி.
- முழங்காலிற்கு மேல் - முருகேசு பொன்னுத்துரை, பரமநாதன் குகானந்தன்.

(3-190) (24)

# புலிகளின் பகுதிக்குள் எடுத்து வரப்படும் உணவு, மருந்துப் பொருள்கள் பகுப்பாய்வு

## தமிழீழ சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை

கிளிநொச்சி,ஏப்.5

அரச கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் கொண்டு வரப்படும் உணவு, மருந்துப் பொருள்கள் தரமானவையா என்பதைக் கண்டறிவதற்குத் தமிழீழ சுகாதார சேவைகள் பிரிவினர் விசேட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதற்கென புலிகளின் சோதனைச் சாவடிகளில் விசேட பகுப்பாய்வு இணைப்பாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

இந்த இணைப்பாளர்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் எடுத்து வரப்படுகின்ற உணவு, மருந்துப் பொருள்கள் தரமானவையா என்பதைப் பரிசோதித்து அனுமதித்தல் மற்றும் தரமற்ற, காலாவதியான பொருள்களைத் தடை செய்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வர் என்று தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி த.வாமன் அறிவித்திருக்கிறார்.

(த) (32)



## புதுக்குடியிருப்பு பாடசாலைகளில் மயிர்க்கொட்டிகள் தாக்கம்

புதுக்குடியிருப்பு,ஏப்.5

புதுக்குடியிருப்பு றோ.க. வித்தியாலயத்தில் மயிர்க்கொட்டிகளின் தாக்கம் அதிகரித்துள்ளது. இதனால், வகுப்புகள் நடத்துவதில் பெரும் சிரமங்கள் எதிர்கொள்ளப்படுவதாகக் கூறப்பட்டது.

பாடசாலை வளவில் நிற்கும் மரங்களிலிருந்து பெருமளவான மயிர்க்கொட்டிகள் வகுப்புகளுக்குள் இறங்குகின்றன. இதனால், வகுப்புகளை நடத்தமுடியாதுள்ளது. சில வகுப்புகள் அருகில் இருக்கும் தேவாலயத்தில் நடைபெற்றுவருகின்றன.

புதுக்குடியிருப்புப் பிரதேச சுகாதார சேவையினரால் மருந்துகள் விசிறப்பட்டது எனினும் மயிர்கொட்டிகளை முழுமையாகக் கட்டுப்படுத்தமுடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (த-353-202)(32)

# ஜேர்மன் அரசின் நிதியுதவியுடன் அளம்பிலில் கல்லாக்கல் தொழிலகம்

சுனாமி மீளமைப்புத் திட்டத்தின் கீழ் ஜேர்மன் அரசின் நிதியுதவியுடன் அளம்பில் பிரதேசத்தில் சிமெந்துக் கல்லாக்கல் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொழிற்சாலைக்கு கடந்த 21ஆம் திகதி அடிக்கல் நடப்பட்டது.

யு.என்டி.பி. நிறுவனத்தின் முல்லை. மாவட்ட நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் வி.நவநீதன், கிராம அலுவலர் ஞானேந்திரன், நிகழ்ச்சித் திட்டப் பொறியியலாளர் த.சுஜிந்திரன், சிரேஸ்ட பொறியியலாளர் மகேஸ்வரராசா, கிராம அபிவிருத்திச் சங்க உபதலைவர் ஜெயக்குமார், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த ஜெயராஜ் ஆகியோர் அடிக்கற்களை நட்டுவைத்தனர்.

(த-307)(32)

## சுத்திகரிக்கப்படாத பரந்தன் சந்தைக் கிணறு

பரந்தன்,ஏப்.5

பரந்தன் சந்தியிலுள்ள பொதுச் சந்தையின் கிணறு சுத்திரிகரிக்கப்படாமையால் வர்த்தகர்களும் பாவனையாளர்களும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த கிணற்று நீர்மூலம் பரந்தன் பொதுச் சந்தை வர்த்தகர்கள், பொதுமக்கள், உணவகத்தினர் உட்படப் பலர் பயனடைந்து வந்தனர். இந்நிலையில் நீண்டநாள்களாக இக்கிணறு புனரமைப்புச் செய்யப்படாமல் உள்ளது. தற்போது நீர் அசுத்தமடைந்துள்ளது. இதனால் கிருமித் தொற்றுகள் ஏற்படக்கூடிய அபாயமும் எழுந்துள்ளது. (த-352) (24)



அரசசார்பற்ற நிறுவனங்களின் வேலைத் திட்டங்கள் தொடர்பான ஒன்றுகூடல் அண்மையில் கனகராயன்குளம் 'நியாப்' திட்டப் பயிற்சி மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட தமிழீழ நிர்வாக சேவையைச் சேர்ந்த சின்னப்பா மாஸ்ரர், விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன், சூழல் நல்லாட்சி ஆணையத்தைச் சேர்ந்த ரஞ்சன், வவுனியா மாவட்ட அரச அதிபர் சண்முகம் மற்றும் பிரமுகர்களை முதலாவது படத்திலும் ஒன்றுகூடலில் கலந்துகொண்டோரை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள்: புளியங்குளம் செய்தியாளர்)

## மேசன், தச்சு தொழிற் பயிற்சி

தென்மராட்சி, ஏப்.5

தென்மராட்சி பிரதேசத்தில் 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கு தச்சுவேலை மற்றும் மேசன்வேலை பயிற்சி வழங்கப்படவுள்ளன.

பயிற்சிக் காலத்தின் போது நாளாந்தம் 200 ரூபா வீதம் கொடுப்பனவும் வழங்கப்படவுள்ளது. ஆறுமாத காலத்திற்கு இப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. இப் பயிற்சிநெறியில் கலந்துகொள்ள விரும்பும் ஆண்கள் தமது விண்ணப்பத்தை எதிர் வரும் பத்தாம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகத்தில் கையளிக்குமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (த-117)(26)

## குழாய்க்கிணறு அமைக்க அனுமதி பெறவேண்டும்

தென்மராட்சி, ஏப்.5

யாழ்.மாவட்டத்தில் குழாய்க்கிணறு அமைக்கவுள்ளோர் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையிடம் அனுமதி பெறப்படல் வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

சபையின் அனுமதியின்றி குழாய்க்கிணறு அமைப்பது இந்த மாதத்துடன் (ஏப்ரல்) தடை செய்யப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விவரங்களை அந்தந்தப் பிரதேச செயலகங்களில் பெற்றுக்கொள்ளுமாறு நீர்வழங்கல் சபையினர் அறிவித்துள்ளனர்.(த-117)(26)

## தரமற்ற நெய் விற்றவருக்கு தண்டம்

தரமற்ற பசு நெய்யை விற்பனைக்காக வைத்திருந்த விற்பனை நிலைய உரிமையாளருக்கு யாழ்.மாவட்ட நீதிமன்றம் ஐயாயிரம் ரூபா தண்டமாக விதித்துள்ளது.

யாழ்.நகர வர்த்தக நிலையமொன்றில் யாழ்.மாநகர சபையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்கொண்ட சோதனையின் போது பசு நெய்யின் மாதிரிபெறப்பட்டு அரச இரசாயனப் பகுப்பாய்வுப் பிரிவிற்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஆய்வறிக்கையில் பசு நெய்யில் கொழுப்பு இல்லாதிருந்ததோடு அனுமதியளிக்கப்படாத நிறத்தினைக் கலப்படம் செய்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து, குறித்த விற்பனை நிலைய உரிமையாளருக்கு எதிராகக் கடந்த 24ஆம் திகதி யாழ்.மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் அவரிடமிருந்து 5 ஆயிரம் ரூபா தண்டமாக அறவிடப்பட்டது. (த-202)(26)

## தென்மராட்சிப் பகுதியில் மின்சாரம் கிடைக்காதோர் விவரம் திரட்டல்

தென்மராட்சி, ஏப்.5

தென்மராட்சி பிரதேசத்தில் இதுவரை மின்சாரம் கிடைக்காத பகுதிகளுக்கு மின்விநியோகம் வழங்குவதற்கான விவரங்கள் பிரதேச செயலகத்தினால் திரட்டப்படுகின்றன.

இதுவரை மின்சார வசதி கிடைக்காத பிரிவுகள் மற்றும் வீதிகளின் விவரங்களை அமைவிட வரைபடத்துடன் பிரதேச செயலகத்தில் உடனடியாகச் சமர்ப்பிக்குமாறு பிரதேசத்தில் உள்ள பொது அமைப்புகளையும் பொது மக்களையும் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் கேட்டுள்ளார்.

விவரங்கள் திரட்டப்பட்டதும் யாழ்.அரச அதிபருடன் தொடர்புகொண்டு மின் விநியோகத்துக்கான ஏற்பாடுகளைச் செய்ய விருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (த-117)(26)

## நிரந்தர வைத்தியரை நியமிக்கக் கோரிக்கை

தென்மராட்சி, ஏப்.5

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு நிரந்தர வைத்தியரை நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பிரதேச மக்கள் தென்மராட்சி பிரதேச செயலரைக் கேட்டுள்ளனர். நீண்டகாலமாக இப் பிரதேசத்திற்கு நிரந்தர சுகாதார வைத்திய அதிகாரி நியமிக்கப்படாததால் மக்கள் பல கஷ்டங்களை அனுபவிக்கின்றனர் என்று கூறப்பட்டது.

பதினைந்து வருடங்களுக்கு மேலாக இப் பிரிவில் பதில் சுகாதார வைத்திய அதிகாரி கடமையாற்றி வருவதும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பணிமனைப் பொறுப்பதிகாரிகளாகக் கடமையாற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது. (த-117)(26)


**தாதிப் பயிற்சி**

தாதிப் பயிற்சி பெற விரும்பும் பெண் பிள்ளைகள் 06, 07-04-2006 ஆகிய திகதிகளில் நேரில் வரவும்.

சு.பாலசுப்பிரமணியம்,
சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்,
08, ராமையாச் செட்டியார் லேன்,
(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில் யாழ்ப்பாணம்)
(48837)(26.11.16)



**மிதிவெடி செயற்பாட்டின் விழிப்புணர்வுக்கும் பங்களிப்புக்குமான**

**சர்வதேச தினம் - ஏப்ரல் 04**

★ வலுவிழந்தோருக்கு முன்னுரிமை கொடுப்போம்.
போதனைகளை சாதனைகளாக்குவோம்.
★ மிதிவெடி செயற்பாடு பற்றி அறிந்து கொள்வோம்.
ஒத்துழைப்பு வழங்குவோம்.
(சி/48678)(26.11.16)



**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
021-222 8250,0777- 222422

**Diploma in Computerized Accounting**

ACCPAC + Quickbooks Premier + MYOB

Course Contents.
Fundamentals of IT
Menual Accounting
Financial Accounting
Cost Accounting
Taxation (Including VAT)
Stock Control
Bank Reconciliation
Budgeting
Fore Casting
Business Planning
80% off

ஆகிய முன்னணி Accounting Software அனைத்தினூடாகவும் கற்பிக்கப்படும்.

வகுப்புக்கள் ஆரம்பம் :-
Morning Batch:-
05/04/2006 :- 09.00
07/04/2006 :- 09.00
Evening Batch:-
05/04/2006 :- 04.30
07/04/2006 :- 04.30
Week Days Batch






முதன் முறையாக
தொழிற்சாலையின்
5 வருட உத்தரவாதம்

License No : 50445
License No : KM41240

Access Graphics


சென்ற் அந்தனிஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 2324261-5, 2337353-5
பெக்ஸ்: 2446554

WATERTEC
Simply Better
முத்திரையை அவதானியுங்கள்

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர், 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


**நீங்காத நினைவுகளுடன்** ... **31 ஆம் நாள் நினைவஞ்சலியும்** ...

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05 - 01 - 1932 | 06 - 03 - 2006 |



அமரர்

## சின்னையா - சின்னத்தம்பி

**அன்பையும் பாசத்தையும் ஊட்டி**
**வளர்த்த எங்கள் அப்பாவே!**
**ஆயிரம் உறவுகள் உண்டு எங்களுக்கு**
**ஆனால் அப்பா என்ற சொல்லுக்கு யாருமில்லை**
**நாள்கள் முப்பத்தொன்றாகியும்**
**தவிக்கின்றோம் உங்கள் உறவுக்காய்!**

இன்று(05-04-2006)புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

***இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.***

இலந்தை வீதி,
உடுவில். (48949)(26.11.16) -குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### *வேலாயுதம் நல்லையா*

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் அளவெட்டியை வசிப்பிடமாகவும் தற்பொழுது கோண்டாவில், உப்புமடத்தடியில் வசித்தவருமாகிய வேலாயுதம் நல்லையா அவர்கள் நேற்றுமுன்தினம் (03.04.2006) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கமலாதேவியின் அன்புக் கணவரும் கீதாவின் அன்புத் தகப்பனும் இராஜ்குமாரின் (ராசன்) அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.04.2006) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

K.K.S. *றோட்,*
*கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.* (48993)(32-11-16-26)

*தகவல்:*
**கமலாதேவி** *(மனைவி)*
**இராஜ்குமார், கீதா** *(மக்கள்).*


**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
No 15, Sirambiyadi Lane,Jaffna.
Tel:- 021-2228250, 0777-222422

**மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2006**

**80% OFF**

| | | |
|---|---|---|
| Diploma in Microsoft Office 750/= Duration :- 3 Months | Diploma in Desktop Publishing ~~6000~~/= 1200/= Duration :- 4 Months | Diploma in Web page Designing ~~7000~~/= 1400/= Duration :- 4 Months |
| Diploma in Graphic Designing ~~7000~~/= 1400/= Duration :- 4 Months | Diploma in Hardware Engineering ~~6000~~/= 1200/= Duration :- 3 Months | Accounting Package ~~7000~~/= 1400/= Duration :- 3 Months |
| Diploma in Computer Science ~~7000~~/= 1400/= Duration :- 4 Months | Honors Diploma in Computer Science ~~9000~~/= 1800/= Duration :- 5 Months | Diploma in Auto CAD ~~6000~~/= 1200/= Duration :- 3 Months |

**Advances Courses**

**50% OFF**

| | | |
|---|---|---|
| Diploma in Net Working | ~~4000~~ | 2000 |
| Diploma in Video Editing | ~~6000~~ | 3000 |
| Diploma in Multimedia | ~~5000~~ | 2500 |

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ், வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி.

வகுப்புகள் ஆரம்பம்

| | |
|---|---|
| Batch I | - 08/04/2006 |
| Batch II | - 09/04/2006 |
| Batch III | - 14/04/2006 |
| Batch IV | - 15/04/2006 |

April 30ம் திகதிக்கு முன்னர் பதிவு செய்துகொள்ளவும்.

# சிலுவைப் பயணத்தின் புனிதத்தை வெளிப்படுத்தும் 'பலிக்களம்' ஆற்றுகை

இரத்தம் இரத்தம்,
செக்கச்சிவந்த இரத்தம்.

முத்து முத்தான இரத்தம் - அன்பு
மூட்டிடுமே மனம் நித்தம்
கொத்துக் கொத்தான இரத்தம் - பாவம்
ஒட்டிடுமே திரு முத்தம்

சொட்டுச் சொட்டான இரத்தம் – பரன்
பட்டதல்லோ சொட்டான இரத்தம் - பரன்
பட்டதல்லோ தினம் எட்டில்
மொட்டு மொட்டான இரத்தம் - இயேசு
கொட்டினரே பூங்காவில்

- பேராசிரியர் நீ.மரியசேவியர் அடிகளார்-

சாகும் கடவுளா? கடவுளுக்குச் சாவா? அதுவும் மனிதர் கையால் சாகும் கடவுளா? சிலுவையின் தனித்துவம் இது தான்!



மனிதரைச் சாகடிக்க வேண்டியது கடவுள் தான். கடவுளைச் சாகடிக்க வேண்டியது மனிதர் அல்ல. மனிதர்பால் கொண்ட மட்டில்லாத அன்பால் தன்னையே சாகக்கொடுக்கும் ஒரு கடவுளைத்தான் நாம் சிலுவையில் பார்க்கின்றோம்.

தன்னை அழிக்கும் மனிதனை அழிக்காமல் தன் அளவில்லா சக்தியை மறைத்துக்கொள்ளும் - மட்டுப்படுத்திக்கொள்ளும் - புதுமைத் தெய்வம் இது.

தண்டனைக்குரிய மனுக்குலமனைத்திற்கும் தண்டனை தராமல், அந்தத் தண்டனைக்குரியவர்கள் தனக்குத் தரும் தண்டனையைத் தன்மீது சுமக்கும் ஒரு விநோதக்கடவுள் இது!

கடவுள் மண்ணில் இறங்கி வரலாம் பக்தரின் இடர் நீக்கலாம்; இன்னல் போக்கலாம்; அநீதியை அழித்து நீதியை நிலைநாட்டலாம்; அதர்மத்தை ஒழித்து தர்மத்தை வாழ வைக்கலாம்; ஆனால், பாவிகள் செலுத்தவேண்டிய விலையைத் தானே செலுத்தும். தன் மரணத்தின் மூலம் செலுத்தும் - தன் உயிரை விலையாகக் கொடுத்துச் செலுத்தும் - இந்தக் கடவுள் அதிசயமான கடவுள்.

கடவுளின் பண்புகள் என்று நாம் சொல்லும், நினைக்கும் அத்தனையையும் கடந்து நிற்கும் இந்தத் துன்புறும் கடவுள் இப்படி இந்தச் சிலுவைக் கோலத்தில் நிற்பதற்கு ஒரு காரணம் இருக்குமென்றால் அது இந்தக் கடவுளின் விந்தை அன்புதான். இதுதான் சிலுவையின் தனித்துவம்.

சிலுவையில் மரித்த கடவுளின் செயல் ஒரு விளக்க முடியாத மறைபொருள்.

பரமாத்மாவிடமிருந்து பிரிந்து நிற்கும் ஜீவாத்மாவை பரமாத்மாவோடு ஒன்றுபடுத்தும் செயலே சிலுவைச் செயல்.

பரமாத்மாவையும் ஜீவாத்மாவையும் இணைக்கும் ஏணி அந்தச் சிலுவை.

பரமாத்மாவோடு ஜீவாத்மா இரண்டறக் கலக்கும் நுழைவாயில் அந்தச் சிலுவை.

பரமாத்மாவுக்குள் ஜீவாத்மா பயணம் செய்யும் தோணி அந்தச் சிலுவை.

அப்படிக் கலந்துவிட்டால், பரமாத்மாவிற்கும் ஜீவாத்மாவிற்குமிடையில் பிளவு கிடையாது. தன்னிலும் அயலவரிலும், உயிர்கள் அனைத்திலும், உயிர் இல்லாததிலும், அகிலத்திலும், அண்ட சராசரத்திலும், அனைத்திலும் ஜீவாத்மா பரமாத்மாவையே தரிசிக்கிறது.

அன்பென்றால், இத்தகைய நிலை அற்ற தன்மையை நாம் எப்படி அழைப்பது?

அதைத்தான் - அந்தப் பிரிவு நிலையைத்தான் - நாம் பாவம், அஞ்ஞானம், அகங்காரம் என்று அழைக்கின்றோம். அந்தப் பிரிவு நிலையை, பிரிவு உணர்வை இல்லாமற் செய்வது தான் சிலுவையின் நிகழ்வு. அனைத்து ஜீவாத்மாக்களையும், பரமாத்மாவோடு சங்கமிக்க வைக்கும் பரமாத்மாவின் செயல்தான் சிலுவைச் சாவு ஆகும்.

இந்தக் கருப்பொருளை வெளிப்படுத்தும் வகையில் திருமறைக் கலாமன்றம் வருடா வருடம் தவக்கால ஆற்றுகையை நடத்தி வருகின்றது.

திருமறைக் கலாமன்றம் வருடம் தோறும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்துச் சென்றாலும் அவற்றுக்கெல்லாம் மணிமுடி சூட்டுவதுபோல் அமைவது இந்த தவக்கால ஆற்றுகை ஆகும்.

இந்த தனித்துவ நிகழ்வை கலைநுட்பங்களோடு, பிரமாண்டமான மேடையில், நூற்றுக்கணக்கான கலைஞர்களின் அர்ப்பணிப்போடு அளிக்கை செய்வது யாவரும் அறிந்த விடயம். இவ்வாற்றுகை நீண்ட நாள்கள் ஒத்திகை செய்யப்படுகின்றது. இதன் விளைபயன் பார்வையாளர்களை நாடகத்துடன் ஒன்றிக்கச் செய்கின்றது.

தவக்கால ஆற்றுகை ஏனையவைபோல சாதாரணமாகச் செய்யப்படக் கூடியது அல்ல; ஏனெனில், இதற்குப் பின்னால் சமய ஒழுங்குமுறை, இறைவனின் கழிவிரக்க நிகழ்வு அடங்கி இருக்கின்றது.

இதனைக் காட்சிப்படுத்த கலைஞர்கள் பக்தி முயற்சியிலும், இதய சுத்தியிலும், ஒறுத்தல் செயற்பாடுகளிலும் ஈடுபட்டே மேற்கொள்ளுகின்றனர்.

'பாஸ்' திருப்பாடுகளின் காட்சி 1950களில் சமய சடங்கு முறையாக காணப்பட்டதோடு பொம்மைகளைக் கொண்டும் நடிக்கப்பட்டது. ஆனால் 1960களில் பேராசிரியர் நீ.மரியசேவியர் அடிகளாரினால் இவ்வடிவம் புதியதொரு பரிமாண நிலையைப் பெறுகின்றது. அதாவது தமிழ் பண்பாட்டுக்குரியதாகவும், நாடகக்கலைவடிவமாகவும் மாற்றப்பட்டது.

## இன்று தொடக்கம் ஐந்து தினங்களுக்கு திருமறைக் கலாமன்றில் மேடையேறுகிறது

இவ் ஆற்றுகைக்கு திருமறை நூலில்இருந்து விடயங்களை எடுத்தபோதும் அவற்றில் உள்ள வாசகங்களை அப்படியே கையாளமல் கலை நயம் தவழும் வகையில் புதிய மொழிநடைகளை கையாண்டுள்ளார்கள். ஒவ்வொரு வருடமும் ஏதோவொரு செம்பொருளை மையமாகக்கொண்டு இத்தவக்கால ஆற்றுகை மேற்கொள்ளப்படுகின்றது.

''நீ. மரியசேவியர் அடிகளார் அவர்களின் நாடக அனுபவங்களையும் அவரால் இயற்றி நடத்தப்பெற்ற நாடகங்களையும் நான் நன்கு அறிவேன். அவர் நாடகக் கலையை நன்கு ஆராய்ந்தறிந்து ரசிகர்களின் உள்ளங்களில்ன் பதியக் கூடியவாறு புனிதமான புதிய முறைகளைப் புகுத்தி நாடகத்தை காண்பித்து வருகின்றார்'' என்பார் கலையரசு க.சொர்ணலிங்கம்.

**யாழ். ராதவல்லி**

(பலிக்களம், அணிந்துரையில் இருந்து 13/03/1973)

இது முற்றிலும் உண்மையானது. பேராசிரியர் நீ. மரியசேவியர் அடிகளால் புதிய உத்திகளை கையாள்வதிலும், ரசிகர்களின் உள்ளத்தை கவருமாறு ஆற்றுகை செய்வதிலும் வல்லவர். இதே தன்மை அடிகளாரின் பண்ணையில் வளர்க்கப்பட்ட கலைஞர்களிடமும் உண்டு.

வருடா வருடம் பல பிரயத்தனங்களின் மத்தியில் ஆற்றுகை செய்யப்படும் இந்த தவக்கால ஆற்றுகை இவ்வருடம் ''பலிக்களம்'' என்ற பெயரில் மேடையேறுகின்றது. இதற்கான எழுத்துருவை பேராசிரியர் நீ. மரியசேவியர் அடிகளாரும், நெறியாழ்கையை ஏ.ஆர். விஜியகுமார் அவர்களும் மேற்கொண்டுள்ளார்கள்.

பலிக்களம் என்னும் இத்தவக்கால ஆற்றுகை இம்மாதம் 5, 6, 7, 8, 9 ஆம் திகதிகளில் மாலை 7 மணிக்கு மன்ற அரங்கில் ஆற்றுகை செய்யப்படும்.

தினமும் . ஆயிரக்கணக்கான பார்வையாளர்களின் இரசனைக்கு விருந்தளிக்கும் இத்தவக்கால ஆற்றுகை வெறும் கேளிக்கை நிகழ்வல்ல, பார்த்துவிட்டு செல்வதற்கு பொழுதுபோக்கு மையமும் அல்ல உளத்தவத்துடன் தடம் பதிக்க வேண்டிய பரமாத்மா சங்கத்துக்கான நீண்ட பயணத்தின் மேல் வரிச்சட்டம்.

எனவே இந்த வருடம் அளிக்கை செய்யப்படும்' பலிக்களம்' என்னும் தவக்கால ஆற்றுகைக்கு கைகொடுத்து உதவுவோம். தொடர்ந்தும் திருமறைக்கலாமன்றம் முன்னெடுத்துச் செல்லும் கலைச் சேவையை மேம்படுத்த ஒத்துழைப்பு நல்குவோம்.(27)

# சுகாதாரத்தை அதி உச்ச நிலையில் உணவகங்கள் பேணுவது அவசியம்

வலி.கிழக்கு,ஏப்.5

அதி உச்ச சுகாதார நிலையை உணவகங்கள் பேணுவது அவசியம் .

- இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் பொ.வைரமுத்து.

நல்லூர் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற உணவக உரிமையாளர்களுக்கான கலந்துரையாடலில் பங்கேற்றுப் பேசியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

கொக்குவில் பிரதேசசபை நூலகக் கேட்போர் கூடத்தில் இக்கலந்துரையாடல் அண்மையில் இடம்பெற்றது.

பிரதேச சபைச் செயலாளர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்டத்தில் அண்மைக்காலமாக பல்வேறு வகையான தொற்று நோய்கள் பரவி வருகின்றன என ஊடகங்கள் மூலம் அறியக் கூடியதாக உள்ளது. நல்லூர் பிரதேசம், பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரிகள் ஆசிரிய கலாசாலை, மற்றும் அரச பணிமனைகள் ஆகியவை உள்ள இடமாகும்.

பல்வேறு இடங்களில் இருந்தும் பொது மக்கள் அதிக எண்ணிக்கையில் தினமும் இப்பிரதேசத்துக்கு வந்து செல்கிறார்கள். அவர்களில் அனேகமானவர்கள் உணவகங்களை நம்பியே உணவு உண்கிறார்கள். எனவே அனைத்து உணவகங்களும் அதி உச்ச சுகாதார நிலையைப் பேணுவது அவசியமாகும்.

பல குறைபாடுகளுடன் சில உணவகங்கள் இயங்கிவருகின்றன என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவிக்கின்றனர். சில உணவகங்களில் கழிவு நீரும், கடையில்சேரும் கழிவுகளும் நிறைந்து துர்நாற்றம் வீசுவதாகக் கூறப்படுகிறது.

எனவே, அனுமதி பெறாது நடத்தப்படும் உணவகங்களின் உரிமம் இரத்துச்செய்யப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

ஐஸ்கிறீம் மற்றும் குளிர்பானம் தயாரிப்பவர்கள் தமது பிரிவுப் பொது சுகாதாரப் பரிசோதகர் ஊடாக உரிய அனுமதி மற்றும் உரிமம் பெற்ற பின்னரே விற்பனை செய்ய முடியும்.

காரணம் பாடசாலை மாணவர்கள் தான் இவற்றைப் பெரும்பாலும் அருந்துகின்றனர் என்றார் அவர். (ஒ-180) (27)

# இளவாலையில் பன்றித் தொல்லை

வலி.தென்மேற்கு,ஏப்.5

இளவாலை வடக்கு மற்றும் சித்திரை மேழி பகுதிகளில் பன்றிகளின் தொல்லை அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இரவு வேளைகளில் இங்குள்ள வயல்களிலும் தோட்டங்களிலும் நுழையும் பன்றிகள் பயிர்களைச் சேதப்படுத்தி வருகின்றன.

குறிப்பாக, மரவள்ளித் தோட்டங்களில் கிழங்குகளைப் பன்றிகள் அதிகளவில் சேதப்படுத்துகின்றன என்றும் இதனால் விவசாயிகள் பாதிப்படைகின்றனர் என்றும் கூறப்படுகின்றது.(ஒ-135)

# யாழ். திரைக்கலைச் சமூகம் கடந்த வாரம் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம்,ஏப்.5

யாழ். மாவட்டத்தில் 'யாழ்ப்பாணம் திரைக்கலைச் சமூகம்' என்னும் அமைப்பொன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 26ஆம் திகதி இடம்பெற்ற சலனசித்திரம் அமைப்பின் பிரதேச செயலர்கள் மற்றும் இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தால் உருவாக்கப்பட்ட பிரதேச செயலக திரைக்கலைச் சங்க உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்ட கூட்டமொன்றிலேயே யாழ்ப்பாண திரைக்கலைச் சமூகம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

அமைப்பின் தலைவராக ஆர். பாலசுப்பிரமணியமும் செயலாளராக சீ.பஞ்சநாதனும் பொருளாளராக வி.எஸ்.சிவநேசனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

திரைக்கலை தொடர்பான முழுமையான தெளிவைக் கொண்டதும், ரசிகர்கள், கலைஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், விமர்சகர்கள் மற்றும் ஆய்வாளர்கள் உட்பட கலை ஆர்வலர்கள் அனைவரையும் உள்ளடக்கியதான சமூகம் ஒன்றை உருவாக்குவதைக் கோட்பாடாகக் கொண்டு இந்த அமைப்பு செயற்படவுள்ளது.

தரமான ரசனையை வளர்த்தல், திரைக் கல்வி புகட்டுதல், திரைப்படத் தயாரிப்புகளை ஊக்குவித்தல், கலைஞர்களின் நலவுரிமைக்காகப் பாடுபடுதல், நலவுரிமைக்காகப் பாடுபடுதல், நல்ல சினிமா கலாசாரத்தை உருவாக்குதல் போன்ற நோக்கங்களைச் செயற்படுத்த இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது என சலனசித்திர அமைப்பின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. (ஒ-202)

## கச்சாய் பாடசாலைக்கு விஞ்ஞானகூடம்

கச்சாய் அ.த.க. பாடாசலைக்கு நிகொட் நிறுவனம் 75 லட்சம் ரூபா செலவில் விஞ்ஞானகூடம் ஒன்றை அமைத்துக்கொடுக்கவுள்ளது. இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. அடிக்கல்லை தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் நட்டுவைத்தார். (ஒ-202) (24)

## தையல்பயிற்சி ஆரம்பவிழா

நல்லூர்,ஏப்.5

நாயன்மார்கட்டு பாரதி சனசமூக நிலைய மாதர் சங்கத்தின் இலவச தையல் பயிற்சி ஆரம்பவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

மன்றத்தின் மாதர் சங்கத் தலைவர் திருமதி சி.கனகரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் பிரதம விருந் தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் மாவை சேனாதிராஜா கலந்துகொண்டார். முன்னதாக தையல் நிலையத்தைத் திறந்துவைத்த நாடாளுமன்றஉறுப்பினர் தையல் பயிற்சியையும் தொடக்கிவைத்தார். (ஒ-111) (24)

## சிரமதானம்

சங்கரணை, ஏப்.5

சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகத்தின் பொன்விழா நிகழ்வு எதிர்வரும் 15ஆம், 16ஆம் திகதிகளில் சித்தன்கேணி பிள்ளையார் ஆலய முன்றிலில் இடம்பெறவுள்ளது. இதனையொட்டி சிரமதானம் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

இந்நிகழ்வை முன்னிட்டு கழகத்தினர் யாழ். பொன்னாலை வீதியில் அமைந்துள்ள சித்தன்கேணியை சிரமதானம் மூலம் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபடவுள்ளனர்.

சித்தன்கேணி சிவன் கோயில், பிள்ளையார் கோயில் சுற்றாடல்களும் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ- 29-202) (27)

## சிக்கனக் கடன் சங்க சமாசவிழா

நல்லூர், ஏப். 5

யாழ். மாவட்ட சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் அனைத்துலகப் பெண்கள் தின விழாவும் கடந்த ஆண்டுக்கான புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகளைக் கௌரவிக்கும் நிகழ்வும் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் சமீபத்தில் நடைபெற்றன.

யாழ். மாவட்ட சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவி திருமதி இ. இராசமணி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந் தினராகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா மங்கல விளக்கேற்றி நிகழ்ச்சியைத் தொடக்கிவைத்தார்.

விழாவில் மாவட்ட மகளிர் குழுத் தலைவி திருமதி ரதி சோதிலிங்கம், வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அதிபர் திருமதி க.பொன்னம்பலம், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ. சிவலிங்கம், தெங்கு பனம்பொருள் உதவி ஆணையாளர் சி. ஐயாத்துரை ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள்.

குறுங்கால மனையியற் பயிற்சி பெற்ற மகளிர் மற்றும் கணனிப் பயிற்சியில் சித்தியடைந்த பணியாளர்கள் ஆகியோருக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

கடந்த ஆண்டு ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மேற்படி சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகள் கௌரவிக்கப்பட்டனர்.

கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

(ஒ-111)

## பிரதேச சபையின் நிதிவளம் பெருக்கி அபிவிருத்திக்கு ஒத்துழைக்கவேண்டும்!

### வலி.கிழக்கு மக்களிடம் வேண்டுகோள்

வலி.கிழக்கு, ஏப். 5

பிரதேச சபையின் நிதிவளத்தை மேம்படுத்தி சபையின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு பொதுமக்கள் உதவவேண்டும்.

இவ்வாறு வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் செயலாளர் த. நடராசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர்மேலும் கூறியதாவது:- பொது மக்கள் தமது பொறுப்புகளை உணர்ந்து பிரதேச சபைக்குச் செலுத்தவேண்டிய சோலைவரி, வியாபாரவரி, வாடகைகள், குத்த-ககள், பொது உரிமங்களை உடன் செலுத்தி உதவவேண்டும்.

அனுமதி பெறப்படாது ஆரம்பிக்கப்படும் கட்டடக் கட்டுமானப் பணிகள் மற்றும் வியாபார நிலையங்கள் போன்றவை அவற்றுக்கான அனுமதிகளைப் பெறுவதன் மூலம் சபையின் நிதி வளத்தை உயர்த்த முடியும்.

இவ்வருடத்திற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு போதிய நிதி வசதி இல்லாதிருப்பதால் சனசமூக நிலையங்கள், பொது நிறுவனங்கள் மக்களுக்கு சபையின் செயற்பாடுகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி நிதிவளத்தைப் பெருக்கி அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள ஒத்துழைக்கவேண்டும்- இவ்வாறு பிரதேச சபைச் செயலாளர் தெவிரித்தார்.

(ஒ-180)

## சகலருக்கும் சமத்துவ நீதி விழிப்புணர்வுக் கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம், ஏப். 5

நீதியானது சமத்துவமாக சகலருக்கும் கிடைக்கவேண்டும் என்ற கருப் பொருளைக் கொண்ட தொடர் விழிப்புணர்வு நிகழ்வுகள் பலவற்றை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் சட்டத்துறையும் யு.என்.டி.பி. யின் சகலருக்கும் சம நீதி வாய்ப்புத் திட்ட அமைப்பும் இணைந்து இம்மாதம் சாவகச்சேரியிலும் யாழ்ப்பாணத்திலும் நடத்தவிருக்கின்றன.

சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் நாளையும் நாளைமறுதினமும் மு.ப. 9.30 மணிக்கு கிராம சேவகர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடைபெறும். 8 ஆம் திகதி யாழ். பொது நூலகத்தின் கேட்போர் கூடத்தில் சட்டத்துறையினருக்கும் சட்ட மாணவர்களுக்குமான கருத்தரங்கு மு.ப 9 மணியிலிருந்து பி.ப.12.30மணிவரை நடைபெறும்.

பொது மக்களுக்கான கருத்தரங்கு அன்று பி.ப. 4 மணிமுதல் 5.30 மணி வரை உதயன் கேட்போர் மண்டபத்தில் நடைபெறும்.

சட்டத்தரணி காலிங்க இன்டா திஸ்ஸ முக்கிய உரை நிகழ்த்துவார். (ப)

## சிறுவர் நிலை குறித்து ஆய்வு

சாவகச்சேரி, ஏப். 5

அறவழிநிலையம் மற்றும் சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஆகியவை இணைந்து மட்டுவில் சந்திபுரம், சரசாலை தெற்கு ஆகிய பகுதிகளில் வாழும் சிறுவர்களை உள்ளடக்கிய குடும்பங்களின் விவரம் மற்றும் விதவைகளின் அரவணைப்பில் வாழும் சிறுவர்களின் விவரங்கள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டுவருகின்றன.

(ஒ-31)


COMPUTER EXPRESS
Institute of Information Technology
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
021-222 8250,0777 222422

யாழ்நகரில் முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன் மூன்று நாள் முழுநேர பயிற்சி நெறி


Mobile Phone Repairing Course


Course Condense:-
- Mobile Phone spares (Mobial Phone இல் காணப்படும் பாகங்கள்)
- Type of I.C (Phone ல் காணப்படும் I.C க்கள்)
- Spares பழுதினால் Phone ல் ஏற்படும் பழுதுகள்
- I.C கள் பழுதடைந்தால் Phone ல் ஏற்படும் பழுதுகள்
- பொதுவாக Phoneல் ஏற்படும் பழுதுகளும் அதற்கான காரணங்களும்
- பழுதுகளும் சோதனை வரிசைகளும்.
- நேரடியாக சில I.C க்களை மாற்றுவதன் மூலம் பழுதுகளை கண்டறியும் சில வழிமுறைகள்.
- ஒரு phone ல் இருந்து இன்னொரு Phone இற்கு மாற்றக்கூடிய I.C வகைகள்.
- Power amp I.C ல் தான் பிழை உள்ளதென கண்டறிய சில வழிமுறைகள்.
- Software fault, software codes.

Hard Ware பயிற்சி
- Battery இல் voltage அளவிடும் முறை Battery நல்ல நிலையில் உள்ளதா என அறியும் முறை. அத்துடன் Chareg ஏறாத Battery ஐ எவ்வாறு மீண்டும் Charge ஏற்றிப்பயன்படுத்துவது பற்றிய பயிற்சி.
- Phone service செய்யும் பயிற்சி.
- Resistors, Transistors, Capacitors போன்ற பொருட்கள் board இல் இருந்து கழட்டி மாற்றுவது பற்றிய பயிற்சி நெறி.
- Charge pin, Battery pin, Sim connector, switch, display போன்றவற்றை கழட்டி மாற்றுவதுபற்றிய பயிற்சி.
- புதிய L.E.D மாற்றுவது எவ்வாறு என்ற பயிற்சி.
- IC களை கழட்டுவது எவ்வாறு மீண்டும் புதிய IC க்களை பொருத்துவது எவ்வாறு என்பது பற்றிய பயிற்சிகள்.
- Phone இல் Charge ஏறாவிடின் Phone இல் எவ்வாறு பரிசோதனைகள் மேற்கொள்வது பற்றிய பயிற்சிநெறி.
- Hot Gun பயன்படுத்துவது எவ்வாறு என்ற பயிற்சி.

Software பயிற்சிகள்
- Lock உடைப்பது என்பது பற்றிய விரிவான விளக்கம் அத்துடன் பயிற்சி.
- ஒரு Phone இல் உள்ள file ஐ எடுத்து புதிய File மாற்றுவது எவ்வாறு என்ற பயிற்சி (Flash பண்ணும் முறை)

அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளதால் பதிவுகளிற்கு முந்துங்கள்

வகுப்புக்கள் ஆரம்பம் 08/04/2006

கொழும்பிலிருந்து வருகைதரும் பிரபல விரிவுரையாள்ரினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்



COMPUTER EXPRESS
Institute of Information Technology
இல.15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.
021-222 8250,0777 222422

முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன் ஒருவாரகால முழுநேர

Diploma in Video Mixing

உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப்பெற, சுயதொழில் ஆரம்பிப்பதற்கு மற்றும் தரம்வாய்ந்த சான்றிதழைப் பெற

Course Contents
- கணனி தொடர்பான அறிமுகம்
- இயக்க அமைப்பு (Windows XP)
- Internet & e-mail
- Adobe Photoshop
- Adobe Premiere
- Cool 3D Studio
- Pinnacle Studio
- VCD Cutter
- Extra practical

Free Study Pack & Photos CD

Course fee :- 3000/=

நன்மைகள்:-
- பாடநெறியின் இறுதியில் Video Editing தொடர்பான பூரண அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதம்.
- அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படுவதால் கணனி தொடர்பான முன்னறிவு அவசியமில்லை.
- தராதரமும் நீண்ட அனுபவமும் கொண்ட விரிவுரையாளர்களால் கற்பிக்கப்படுகின்றது.
- 100% செய்முறைப் பயிற்சிகளுடனான விரிவுரைகளிற்கு உத்தரவாதம்.

வகுப்புக்கள் ஆரம்பம்:-
10/04/2006 :- 08.30



IIS CITY CAMPUS
Admissions For Academic Year 2006/2007

Date of Closing : 1st May 2006

Date of Selection Exam : 25th June 2006

IIS CITY CAMPUS
# 200, Sivanpannai Road
(Near Vaitheeswara Junction)
Jaffna
Tel : 021 222 8060
Fsx : 021 222 6933
Email : iiscc@sltnet.lk

BIT
Bachelor of Information Technology
University of Colombo School of Computing

கொழும்பு பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பமானி பட்டக்கல்விக்கான கல்வியாண்டு 2006/2007 இற்குரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

- விண்ணப்பதாரி 17 வயதிற்கு மேற்பட்டவராகவும் க.பொ.த (உ.த) பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவராகவும் இருத்தல் வேண்டும்.
- இவ்வாண்டு க.பொ.த (உ.த) பரீட்சைக்குத் தோற்றவுள்ளமாணவர்களும் விண்ணப்பிக்கலாம்

BIT பட்டப்படிப்புக்கு வடக்கு, கிழக்கிலேயே அதிகளவு மாணவர்கள் கல்வி கற்பதும், பரீட்சைகளில் சித்தியடைவதும் எமது நிறுவனத்திலேயே என்பது யாவரும் அறிந்ததே.

"Success Through Knowledge"



மாபெரும் யாழ். வர்த்தக கண்காட்சி -2006

பண்டிகைக் காலத்தைக் கொண்டாடுங்கள்!

காலம்: ஏப்ரல் 8 முதல் 11 வரை
இடம்: யாழ்/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.
நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு :-
DREAM SOLUTIONS (PVT) LTD
275, JAFFNA ROAD, MANIPAY.

# ஆயிரக் கணக்கான மாணவருக்கு வழிகாட்டிய பரீட்சைக் கருத்தரங்கு









## என்.ஐ.ஐ.ரி. அனுசரணையுடன் 'சுடர் ஒளி' நடத்திய பரீட்சைக்கான கல்விச் சேவை

'NIIT' கணனிக் கல்வி நிறுவனத்தின் (சர்வதேச தரம் மிக்க கணனிக் கல்வியை வழங்கும் இலங்கையின் தலைசிறந்த கணனிக் கல்வி நிலையம்) பூரண அனுசரணையுடனுன், சுடர்ஒளி பத்திரிகை நிறுவனத்தின் சிறப்பு ஏற்பாட்டில் மார்ச் 11,12 ஆகிய திகதிகளில் வவுனியாவிலும் திருமலையிலும் ஒரே நேரத்தில் இலவச பரீட்சை வழிகாட்டல் கருத்தரகுகள் நடைபெற்றன. இதில் முதலாம், இரண்டாம், மூன்றாம் அமர்வுகளில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள அனைத்து மாணவர்களும் பங்குபற்றி பயன்பெற்றிருந்தனர். இக்கருத்தரங்கில் கருத்துரைகளையும் வினா விடை விளக்கங்களையும் பரீட்சை வழிகாட்டல் உத்திகளையும் வழங்கிய வளவாளர்களாக யாழ். மாவட்ட தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகளின் அனுபவமும் திறமையும் மிக்க முன்னணி ஆசிரியர்கள் பங்கு பற்றியிருந்தனர்.

வவுனியாவில் இந்து இளைஞர் கலாசார மண்டபத்தில் வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளரும் சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் வவுனியா தெற்கு கல்வி வலய பிரதிக கல்விப் பணிப்பாளரும் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் அப் பாடசாலை அதிபரும் திருமலையில் ஸ்ரீ விக்னேஸ்வர மகாவித்தியாலயத்தில் திருமலை வலயக்கல்விப் பணிப்பாளரும் ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் அப்பாடசாலை அதிபரும் ஸ்ரீ சண்முக மகளிர் கல்லூரியில் அப்பாடசாலை அதிபரும் மங்களகரமாக இக்கருத்தரங்கினை காலை 8.30 மணியளவில் ஆரம்பித்து வைத்து ஆரம்ப உரைகளையும் வழங்கினர்.

இவர்கள் அனைவரும் தமது ஆரம்ப உரையில் எந்த நிறுவனமும் இதுவரை செய்ய நினைக்காத இந்த சேவை நோக்கிலான மாபெரும் கருத்தரங்கினை 'NIIT' கணனிக் கல்வி நிறுவனமும் சுடர்ஒளிப் பத்திரிகையும் செய்ய முன்வந்தமையை வாழ்த்தியதோடு, தமது நன்றியறிதல்களையும் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொண்டனர். அத்துடன் இக்கருத்தரங்கு மாணவர்களுக்கு நிச்சயம் பயன்மிக்கதொரு வரப்பிரசாதமாய் அமையுமெனவும் குறிப்பிட்டதுடன் வளவாளர்களாக பங்குகொண்ட யாழ்.மாவட்ட முன்னணி ஆசிரியர்களையும் மனமகிழ்ந்து பாராட்டினார்கள்.

சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணி வரை மேற்படி 6 மண்டபங்களிலும் ஒரே நேரத்தில் நடந்துமுடிந்த இக்கருத்தரங்குகளுக்கு மண்டப்ங்கள் நிறைந்த எண்ணிக்கையில் மாணவர்கள் பங்குபற்றி பயன்பெற்றனர்.

உயர்தரப்பரீட்சைக்குரிய அனைத்துப் பாடங்களும் இக்கருத்தரங்கில் இடம்பெற்றமை. இன்னொரு சிறப்பம்சமாகும். இக் கருத்தரங்குகளில் மன்னார் மாவட்டத்திலிருந்தும் பெரும்பாலான மாணவர்கள் வவுனியாவிற்கு வருகைதந்து பங்குபற்றி இருந்தனர். திருமலையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்தும் கல்விக்கழகப் பொறுப்பாளரின் ஏற்பாட்டில் பெரும்பாலான மாணவர்கள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

இக்கருத்தரங்கில் வவுனியாவில் ஏறத்தாழ கலைப்பிரிவில் 800, வர்த்தகப்பிரிவில் 500, கணிதப்பிரிவில் 350, விஞ்ஞானப் பிரிவில் 300 மாணவர்களும் திருமலையில் முறையே 750, 500, 350, 400 மாணவர்களும் பங்குபற்றியிருத்தனர். அனைத்து மாணவர்களுக்கும் பல தொகைப்பக்கங்களைக்கொண்டகையடக்க பரீட்சை வழிகாட்டல் குறிப்புகள் இலவசமாக வழங்கப்பட்டன.

பெரும் நிதிச் செலவிலும் பல்வேறுபட்ட சிரமங்களுக்கு மத்தியிலும் இக்கருத்தரங்கிற்கு பூரண அனுசரணை வழங்கிய 'NIIT' கணனிக்கல்வி நிறுவனத்தினர் இக்கருத் தரங்கை ஒட்டி வெளியிட்ட தகவலில், இதுவரை உயர் தரப் படிப்பை முடித்த மாணவர்களுக்கு உயர் தரக் கணனிப் பட்டக்கல்வியை சர்வதேச அங்கீகாரமிக்கதாக வழங்கிய நாம் இன்று நீங்கள் உயர்தரப் பரீட்சை எழுதுவதற்கு இலகுவாக இப்பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கிற்கு பூரண அனுசரணை வழங்கியுள்ளோம் என்றும் மாணவர்கள் அனைவரும் இக்கருத் தரங்கைப் பூரணமாகப் பயன்படுத்தி உயர்ந்த பெறுபேறுகளைப்பெற வேண்டும் எனவும் வாழ்த்திய்துடன் இக்கருத்தரங்கில் பங்குபற்றிய மாணவர்களில் குறிப்பிட்ட தொகை மாணவர்களை எதிர்காலத்தில் அதிர்ஷ்ட அடிப்படையில் தெரிவுசெய்து இலவச கணனிப்பட்டக் கல்வியை வழங்கவும் தாம் தீர்மானித்துள்ளதாகவும் மகிழ்ச்சிகரமாகத் தெரிவித்திருந்தனர்.


இவர்களது இந்த சேவையை வவுனியா, திருமலை கல்விச் சமூகம் பாராட்டியுள்ளது. இக் கருத்தரங்கிற்கு வவுனியா, திருமலை வலயக்கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் எனப்பலரும் பல்வேறு ஒத்துழைப்புகளையும் வழங்கியிருந்தனர். இது குறிப்பிட்ட கருத்தரங்கை ஏற்பாடு செய்த அமைப்பினருக்கு மிகவும் ஒத்துழைப்பாக இருந்ததுடன் அவர்கள் கல்விச் சேவைக்காக தங்களை அர்ப்பணிக்கின்றார்கள் என்பதையும் அக் கருத்தரங்கை ஏற்பாடு செய்த அமைப்பாளர்களால் விளங்கிக்கொள்ளக் கூடியதாக இருந்தது.

கல்விமான்களால் பாராட்டப்பட்ட இக் கருத்தரங்கை திருமலை, வவுனியாவில் 'NIIT' கணனிக் கல்வி நிறுவன உத்தியோகத்தர்களும் மாணவர்களும் சுடர்ஒளிப் பத்திரிகை உத்தியோகத்தர்களும் பணியாளர்களும் திறம்பட ஒழுங்கமைத்து நடத்தி முடித்திருந்தனர்.

மேற்படி கருத்தரங்கிற்கான வளவாளர் அணியில் வர்த்தகப் பிரிவில் டி.சாம், பி.எஸ். பசில், வி.கருணாகரன், எஸ்.வரதராஜன் ஆகியோரும் கலைப்பிரிவில் திருமதி மீரா அருள்நேசனும், எஸ்.ஜோதிஸ்வரன், எஸ். எஸ்.மனோகரன், ஆர்.எஸ். சந்திரன், பி.எஸ். குமரன் ஆகியோரும் கணித, விஞ்ஞானப் பிரிவில் வி.எஸ். குணசீலன், ரீ.கெங்காதரன், ரீ.தம்பிராஜா, வி.சி.அன்பழகன், ஆர்.குமரன், எஸ்.சோதிலிங்கம், எஸ்.செந்தில்நாதன், எஸ்.எஸ்.செந்தில்ராஜ், ஆர்.குகன் ஆகியோரும் அடங்கியிருந்தனர்.

எந்தக் கொடுப்பனவையும் எதிர்பாராது மாவட்டப் புரிந்துணர்வு அடிப்படையில் மாவட்ட ஒற்றுமையை மேம்படுத்த சேவை நோக்கில் மேற்படி ஆசிரியர் அணி இக்கருத்தரங்கில் பல்வேறு தனிப்பட்ட கடமைகளையும் விலக்கி பங்குபற்றியமையை மாணவர்கள், கல்வியாளர்கள், 'NIIT' கணனிக் கல்வி நிறுவனம், சுடர்ஒளிப் பத்திரிகையினர் ஆகியோர் பாராட்டுகின்றனர்.







வடக்கு - கிழக்கில் ஒரே நேரத்தில் இரு மாவட்டங்களில் மேற்படி சிறப்பு ஆசிரியர் அணி கருத்தரங்கை மேற்கொண்டு வெற்றிகரமாக நடத்தி முடித்தமை இதுவே முதற் தடவையென பலரும் பாராட்டியுள்ளனர். (கருத்தரங்கில் எடுக்கப்பட்ட படங்களையும் காணலாம்.)



மந்துவில் கிழக்கு பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தில் கல்வி பயின்று தரம் ஒன்றுக்கு செல்லும் சிறார்களுக்கான பிரிவுபசார விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் அண்மையில் கல்வி நிலையத்தில் நடைபெற்றன. இந்த நிகழ்வில் கலந்துகொண்ட சிறார்களுடன் ஆசிரியர்களும் நிர்வாகத்தினரும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதியையும் படத்தில் காணலாம். (படம்: சாவகச்சேரி செய்தியாளர்)



கோண்டாவில் மத்திய கிராம முன்னேற்றச் சங்கத்தினால் பாடசாலை மாணவர்களுக்கு இலவச மாலை நேரக் கல்வி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இங்கு கல்வி பயிலும் மாணவர்களோடு நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம். (ஐ-14)



மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலையில் இடம்பெற்ற தரம் ஒன்று மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழாவில் விருந்தினர்களாகக் கலந்துகொண்ட வைத்தியர் திருமதி புஷ்பராணி லியோன், பீ.வேலுப்பிள்ளை மற்றும் பாடசாலை அதிபர், ஆசிரியர்களுடன் மாணவர்கள் காணப்படுகின்றனர். (படம்: தென்மராட்சி செய்தியாளர்)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள WPGW-xxxx நம்பர் உடைய அலுமினிய Full Body Isuzu 250 வான் உடன் விற்பனைக்குண்டு. (தரகர் தேவையில்லை). தொடர்பு: 388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.021 222 8013 நேரம் 8.30 - 6 மணிவரை பார்வையிடலாம். (48948)

பலவர்ண லவ்பேட்ஸ், கனன் 1215 போட்டோ பிரதி இயந்திரம், தொலைபேசி நிலையத்தில் பாவிக்கக்கூடிய கண்ணாடிக் கூடு ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு: சி.க. துரைசிங்கம் (K.R.), 270, கனகரத்தினம் வீதி, நாயன்மார்க்கட்டு, யாழ்ப்பாணம். (48967)

டாக்டரின் பாவனையில் உள்ள 52-xxxx தொடரிலக்கமுடைய ரொயாட்டா ரவுன்ஏஸ் வான் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P. 0602221518, 0776013616 (48962)

பெண்களுக்கான ஏசியா சைக்கிள், ஆண்களுக்கான றலி சைக்கிள், சில் (R-80) குளிர்சாதனப்பெட்டி, கொம்பியூட்டருக்கான மொனிற்றர் (Vieu Sonic - 15") என்பன விற்பனைக்குண்டு. தொடர்பிற்கு இல.5 வைமன் வீதி, நல்லூர். (48964)

## காணி விற்பனைக்கு

கொழும்புத்துறை, துண்டி சந்திக்கு அருகில் நல்ல சுற்றாடலில் 1½ பரப்புக்காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 021 4590829 (48933)

## கட்டர் விற்பனைக்கு

அச்சுக்கூடங்களுக்கு உகந்த கட்டர் விற்பனைக்குண்டு. தொடர்பு: கண்மணி. T.P. 0779588569 (48774)

## வான் விற்பனைக்கு

56.... தொடரிலக்கமுடைய ஹைஏஸ் வான், வான்சீற், வான் றேடியோ, ஹெற்லைற் ஒருசோடி என்பன விற்பனைக்குண்டு. தொடர்பிற்கு 0773564245 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும் (48971)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை). தொடர்பு: நல்லூர் கிலியோ சென்ரர் வளவு, 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி/48695)

## மணமக்கள் தேவை

1976 அனுஷம் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் மணமகனுக்கு அரச உத்தியோகம் பார்க்கும் மணப்பெண்ணும், 1973 அச்சுவினி 4ஆம் பாதம், லண்டன் P.R., 8 செவ்வாய் மணமகனிற்கு B.A., B.Sc. படித்த மணப்பெண்ணும் 1978 R.C வேத பெண்ணிற்கு விவேயூர் மணமகனும் தேவை. தொடர்பு: விதூஸ், 44, புங்கன்குளம் வீதி, கொழும்புத்துறை. T.P. 0776146221 (48953)

## மணமகள் தேவை

யாழ்.இந்து 1972, ஹொலண்ட் P.R., திருவாதிரை, 2 செவ்வாய், 1974, அவிட்டம் 2ஆம் பாதம், லண்டன் P.R., 1976 அச்சுவினி 4இல் செவ்வாய் B.A. ஆசிரியர், 1976 மிருகசீரிடம் Computer Application Assistant ஆகியோருக்கு மணமகள்மார் தேவை. தொடர்பு: விதூஸ், 44, புங்கன்குளம் வீதி, கொழும்புத்துறை T.P. 0776146221.(48954)

## திருமண சேவை

பொறியியலாளர்கள், மருத்துவர்கள், விஞ்ஞானப் பட்டதாரிகள் ஆசிரியர்கள், வர்த்தகர்கள் மற்றும் பல்தொழில் வகை சார்ந்த உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களின் ஜாதகங்கள் எம்மிடமுண்டு. தேடுவோர் நாடலாம். த.சிவானந்தன், பிரபல ஜோதிடர் 5, வைமன் வீதி, நல்லூர். (48964)

## குருபூசை நிகழ்வு

தவத்திரு வேமுருகேச சுவாமிகளின் 9ஆம் ஆண்டு குருபூசைத்தின நிகழ்வுகள் இன்று காலை 8 மணிக்கு சந்திரியான் ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளன. நிகழ்வில் சிவத் திரு. வ. குமாரசாமி ஐயரின் சிறப்புச் சொற்பொழிவும் வயாவிளான் ம. ம. வி. மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன(த-202)(21)

## தவறிவிட்டது

சதானந்தம் லக்ஷ்மணன் என்பவருடைய தேசிய அ. அட்டை (இல. 751952074 V) முக்கிய ஆவணங்களுடன் 31.03.2006 வெள்ளிக்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 10, பீச் றோட், ரச்ச மோட்டை என்ற முகவரிக்கு அல்லது 0779591188 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். ஒப்படைப்பவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும்.(48956)

துன்னாலை மேற்கைச் சேர்ந்த ஜெயசீலன் பி.சுரேஸ்குமார் என்பவரது கைச்சங்கிலி 31.03.2006 அன்று கோவில் சந்தைக்கும் மந்திகை ஆஸ்பத்திரிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஜெ.பி. சுரேஸ்குமார், அனிஞ்சிலடி, துன்னாலை மேற்கு, கரவெட்டி என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். T.P. 0776257873, 0779186326 (சி/48690)

ஆடியபாதம் வீதிக்கும் கே.கே.எஸ் வீதிக்கும் இடையில் தங்க நகை ஒன்று 03.04.06 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். கண்ணன் T.P. 222 3105, 0777107169 (தகுந்த சன்மானம் வழங்கப்படும்). (48963)

## கிணற்றில் வீழ்ந்து வயோதிபர் மரணம்

யாழ்ப்பாணம், ஏப்.5 கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்ததாகத் தெரிவித்து வயோதிபர் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் மானிப்பாய் பொலீஸாரால் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தொட்டிலடி, சங்கானையைச் சேர்ந்த நவரட்ணம் மாணிக்கம் (வயது 76) என்பவரது சடலமே நேற்று முன்தினம் மாலை யாழ். போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டது. (த-13-14)(26)

## 4 ஆம் ஆண்டு நினைவு

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 23 - 05 - 1940 |  | 22 - 03 - 2002 |

### கந்தையா இராசமணி

நினைவுகள் எனும் சோலைதனில்
நீங்காத இடம் பிடித்து நீவிர்
நீண்ட துயில் கொண்டாலும் - உம்மை
நிலையான உறவுகள் மறவாது என்றும்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

24/2, பாரதி வீதி,
கச்சேரி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

(48960) (27.21.11.14)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 03 - 04 - 1942 |  | 18 - 03 - 2005 |

### அமரர் மாணிக்கம் சிவபாததுரை

ஆண்டுகள் ஒன்றான போதும்
ஆறவில்லை எம் துயரம்
எங்களுக்கு நல்வழிகாட்டிய அப்பாவே!
எமக்கு இனிய வாழ்வளித்த தெய்வமே!
உங்கள் நினைவுகள் எங்களை விட்டுப் போகாது
என்றென்றும் எங்கள் உயிர் உள்ளவரை
இந்த மண்ணில் உங்களோடு வாழ்ந்த காலங்கள்
எம்மனதை விட்டு அகலாது
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்

அரசடி வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர்

(48929) (21.11.14)

## வீடு வாடகைக்கு

37/1, றக்கா ஒழுங்கை, சுண்டிக்குளி, அச்சன் நிறுவனத் திற்குப் பக்கத்தில் 4 பரப்புக் காணியுடன் 3000 சதுர அடி கொண்ட சகல வசதிகளுடன் கூடிய வீடு 1.5.2006ஆம் திகதிதொடக்கம் வாடகைக்குண்டு. வீடு முழுவதும் றொறாசோ பதிக்கப்பட்டுள்ளது. கார், லொறி தரிப்பிடங்களும் உண்டு. நிறுவனங்களுக்குகந்தது. தற்போது 'சாந்தி' நிறுவனத்தின் பாவனையில் உள்ளது.

தொ.பே.இல. 021 222 2404 — தொடர்பு: 49/4, மனால்தறை ஒழுங்கை, கந்தர்மடம்.

(48959)(26.21.11.14)

## மனோதத்துவ வைத்தியம்

**( GENERAL PSYCHO THERAPY)**

**இப்பொழுது யாழ்ப்பாணத்தில்**

**05.04.06 - 11.04.06**

முன்கூட்டியே பதிவு செய்யவும்

இளைஞர்களே!

- சக்தி குறைவு
- ஞாபக மறதி
- பயம்
- நடுக்கம்
- நித்திரைக் குறைவு
- ஆண்மைக்குறைவு
- நீரிழிவு நோய்

என்பவற்றால் தாழ்வு மனப்பான்மையா?

கவலையை விடுங்கள் ஆரம்ப மனநோய் பாதிப்பு உடனடியாக நீக்க என்னுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள். ஆண்மை சக்திக் குறைவுதான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம். பலர் இங்கே சிகிச்சை பெற்றுப் பூரண சுகமடைந்தமைக்கு ஆதாரம் உண்டு.

குறிப்பு இறுதி நேரத்தில் வருவதைத் தவிர்க்கவும்

தொடர்புகளுக்கு: பலரது பாராட்டைப் பெற்ற
பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P. ஆறுமுகம் S.M.P
A.S.N சுற்றுலா விடுதி, 392/A, மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்)
Govt.Regd.No.9492
Hot Line 0777 569205, T.P. 3181, 5399
(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்)

(சி-48687) (21.11.14)

## உங்களுக்கோர் சேமிப்பு உங்களுக்கோர் இல்லம்.

**காணி வாங்குதல், வீடு கட்டுதல், வீடு வாங்குதல், வீடு திருத்தியமைத்தல் போன்ற தேவைகளுக்கு கடன்பெற சேமிப்புக் கணக்கு ஒன்றை எங்களுடன் ஆரம்பியுங்கள்.**

**மேலும், அதியுயர் வட்டியில்**

- **நிலையான வைப்புக்கணக்குகள்**
- **முதியோர் நிலையான வைப்பிற்கு விசேட சலுகைகள்.**

**பிரதிநிதி ஒருவரின் ஆலோசனை பெற அழையுங்கள் 021-222 6258**

CBSL
செலிங்கோ வீடமைப்பு கடன் சங்கம் (லிமிட்டட்)
24,கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.021-2226258

(48957)(26.11.14)

## மரண அறிவித்தல்

### கிளமென்ற் சேக்ஸ்பியர்

(ராஜன் - பிரான்ஸ்)



குருநகரைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட கிளமென்ற் சேக்ஸ்பியர் (ராஜன்) கடந்த 27.03.2006 திங்கட்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் கிளமென்ற் (யேகப்) - ஆரோக்கியம் (மலர்) தம்பதியரின் அன்பு மகனும், ஆரோக்கியநாதன் - அஞ்சலீனா தம்பதியரின் அன்பு மருமகனும், எமரன்சியா சுமதினியின் (பிரான்ஸ்) அன்புக் கணவரும், ஹென்றி, ரொனி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (05.04.2006) புதன்கிழமை பிரான்ஸில் நடைபெறவிருப்பதால் அவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக நாளை (06 . 04. 2006) வியாழக்கிழமை காலை 6.15 மணியளவில் புனித யாகப்பர் ஆலயத்தில் இடம்பெறும் திருப்பலியிலும், இல்ல வழிபாட்டிலும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகிறோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

20, புதுமை மாதா கோயில்,மேற்கு வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல் :
தாய், சகோதரர்கள்.

(48958) (27.21.11.14)




# கிறீன் பலஸ்

யாழ் நகரில் குறைந்த விலையில்
நிறைந்த ரகங்கள்! நிகரில்லாத தரங்கள்! அழகிய
புடைவைத் தினுசுகளின் குளிரூட்டப்பட்ட சாம்ராஜ்ஜம்

# எம்போறியம்



**பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி, திருநெல்வேலி.**

(சி-48693)

# நேபாள தலைநகரில் மாவோக்கள் ஒருதலைப்பட்ச போர் நிறுத்தம்!

## ஆனால் அரசுத்தரப்பு அதை ஏற்க மறுப்பு

காத்மண்டு,ஏப்.5

நேபாள தலைநகரில் ஆயுத செயற்பாடுகளை,காலவரையறையற்ற முறையில் நிறுத்தி வைத்திருப்பதாக நேபாள மாவோ தீவிரவாதிகள் அறிவித்துள்ளனர். ஆனால், அரசாங்கம் இந்த அறிவித்தலை ஏற்கமறுத்து நிராகரித்துள்ளது.

ஏழு கட்சிகள், கூட்டமைப்பு, மன்னர் ஆட்சிக்கு எதிரான நாடாளவிய விதத்தில் பொது வேலைநிறுத்தம் மற்றும் பேரணிகளை நடத்துவதற்குத் திட்டமிட்டிருக்கும் வேளையில் மாவோ தீவிரவாதிகளின் அறிவித்தல் வந்துள்ளது.

ஏழு கட்சி கூட்டமைப்பினர் பேரணி நடத்த முடியாது. ஏனென்றால் தீவிரவாதிகள் பேரணிக்குள் ஊடுருவுவதற்கும் வன்முறைகளைத் தூண்டி விடவும் திட்டமிட்டிருக்கிறார்கள் என்று அதிகாரிகள் கூறியிருக்கின்றார்கள்.

2005ஆம் ஆண்டு பெப்ரவரியில் மன்னர் ஜியானேந்திரா ஆட்சி அதிகாரத்தை நேரடியாக தம் பொறுப்பில் கவர்ந்து கொண்டதை எதிர்த்து எழு கட்சி கூட்டமைப்பு தொடர்ச்சியான போராட்டங்களை நடத்திவருகின்றது.

தலைநகர் காத்மண்டுவிலும் அயலிலுள்ள வேறு இரு மாவட்டங்களிலும் ஆயுத நடவடிக்கைகளை இடைநிறுத்துவதாக தீவிரவாதத் தலைவர் பிராந்தா கடந்த திங்களன்று அறிவித்திருந்தார்.

ஏழு கட்சி கூட்டமைப்பினால் மன்னருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் ஆர்ப்பாட்டப் போராட்டங்களுக்கான சுமுகமான நிலைமையைத் தோற்றுவிப்பதற்காகவே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுகின்றது.


வரும் வியாழன் முதல் நாடு முழுவதிலும் கடையடைப்புகளை நான்கு நாள்களுக்கு முன்னெடுக்கவும் சனிக்கிழமை காத்மண்டுவில் பேரணியொன்றை நடத்தவும் ஏழு கட்சி கூட்டமைப்பு திட்டமிட்டுள்ளது. இதன் காரணமாக தலைநகரில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மும்முரமாகியுள்ளன. போராட்டங்களை தடுத்து நிறுத்த ஊரடங்கு விதிக்கப்படலாம் என்று சிரேஷ்ட அமைச்சர்கள் சிலர் கூறியுள்ளனர்.

எதிர்க்கட்சி போராட்டங்களில் தீவிரவாதிகள் ஊடுருவியுள்ளார்கள் என்ற போர்வையில் அரசாங்கம் தலையிடுவதைத் தவிர்ப்பதற்காகவே ஓரளவு போர்நிறுத்தம் அறிவிக்கப்பட்டிருப்பதாக தீவிரவாதத் தலைவர் கூறினார்.

மன்னார் ஜியானேந்திராவின் நேரடி அதிகார கைப்பற்றலுக்கு எதிரான 7 கட்சி கூட்டமைப்பில் மாவோ தீவிரவாதிகளுடனான இணைப்பு மிக பலவீனமாகவே உள்ளது. தீவிரவாதிகள் வன்முறையைக் கைவிடாதவரையில் ஒருங்கிணைப்புக்கு இடமில்லையென்று கூட்டமைப்பு அறிவித்துவிட்டது.

தீவிரவாதிகள் சமீபத்தில் 4 மாத காலம் ஒரு தலைப்பட்சமாக போர்நிறுத்தம் கடைப்பிடித்தனர். தீவிரவாதிகளை நம்புவதற்கில்லை என்று அரசாங்கம் போர்நிறுத்தத்திற்கு பிரதிபலிப்பைக் காட்டவில்லை. தீவிரவாதிகள் போர்நிறுத்தத்தைக் ஜனவரியில் கைவிட்டதையடுத்து வன்முறைகள் விரிவடைந்துவிட்டன. மாவோ தீவிரவாதம் ஆரம்பித்து கடந்த 10 ஆண்டுகளில் 13 ஆயிரம் மக்கள் பலியாகியுள்ளனர். மன்னர் ஆட்சியை அகற்றி கம்யூனிஸ குடியரசு நிறுவப்படவேண்டும் என்று மாவோ தீவிரவாதிகள் போராடி வருகின்றார்கள். (ப)(22)

## தங்க ராஜகோபுர கும்பாபிஷேகம்



சென்னை,ஏப்.5

பழனி முருகன் ஆலயத்தின் தங்க ராஜகோபுரத்துக்கான கும்பாபிஷேகம் நேற்றுமுன்தினம் லட்சக் கணக்கான பக்தர்களின் அரோகரா கோஷத்தின் மத்தியில் மிகவும் பக்திபூர்வமாக நடந்தேறியது.

கும்பாபிஷேக கிரியைகளின் போது ஆறு லட்சம் மந்திரங்கள் ஓதப்பட்டன. பக்தர்கள் மீது ஹெலிகெப்டரில் இருந்து மலர்கள் தூவப்பட்டன.

பழனியாண்டவரை மக்கள் சுமார் 70 அடி தூரத்தில் நின்று தரிசிப்பதற்கு வசதியாக மண்டப வசதிகள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. ராஜகோபுர கும்பாபிஷேகக் காட்சியைப் படத்தில் காணலாம். (ஐ)(22)

## தங்கள் பிரதமர் யார் என்பதை ஈராக்கியர்களே முடிவு செய்யவேண்டும்

### அமெரிக்கா கூறுகிறது

பக்தாத்,ஏப்.5

ஈராக்கின் புதிய பிரதமர் யார் என்பதை ஈராக்கிய மக்கள்தான் முடிவுசெய்ய வேண்டும். எனினும், அவர் சக்திவாய்ந்தவராகவும் நாட்டு மக்களை ஒற்றுமைப்படுத்துபவராகவும் இருக்கவேண்டும்.

- இவ்வாறு அமெரிக்கா கூறியிருக்கிறது.

அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் கொண்டலிஸா ரைஸ், பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் ஜக்ஸ்ரோ ஆகியோர் ஈராக்குக்கு இரண்டு நாள் பயணமாக வந்துள்ளனர். டிசெம்பர் 15ஆம் திகதி தேர்தல் முடிவடைந்துவிட்டபோதிலும் ஈராக்கில் இன்னும் புதிய அரசு அமையவில்லை.

எனவே,.புதிய தேசிய அரசை அமைக்கும் நடவடிக்கையை விரைவுபடுத்தும் நோக்கத்தில் அவர்கள் பக்தாத்துக்கு வந்துள்ளனர்.

தற்போதைய பிரதமர் இப்ராஹிம் அல் - ஜபாரியை ஷியா பிரிவு முஸ்லிம்கள் ஆதரிக்கின்றனர். ஆனால், சுனி மற்றும் குர்திஷ் இன அரசியல் தலைவர்கள் இப்ராஹிம் மீது பல முறைப்பாடுகளைக் கூறியுள்ளனர். எனவே, புதிய அரசு அமைவதில் முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் கொண்டலிஸாவும் ஜக்ஸ்ரோவும் பக்தாத்துக்கு வந்திருப்பது முக்கியத்துவம் பெற்றுள்ளது. (ஐ)(22)

## அஸாம் மாநிலத் தேர்தலில் பிரதமர் வாக்களிக்கவில்லை

### தொகுதி மக்கள் ஏமாற்றம்



குஹாத்தி,ஏப்.5

இந்தியாவில் அஸாம் மாநிலத்தில் நடைபெற்ற தேர்தலில் திஸ்பூர் தொகுதி வாக்காளர் பட்டியலில் பிரதமர் மன்மோகன் சிங்கின் பெயர் இடம்பெற்றிருந்தாலும் திங்கட்கிழமை நடைபெற்ற வாக்களிப்பின்போது அவர் வாக்களிக்காதது தொகுதி மக்களிடம் பெரும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது - என்று இந்தியச் செய்தி ஒன்று தெரிவித்தது.

முதல் கட்டமாக 65 தொகுதிகளில் திங்கட்கிழமை வாக்குப் பதிவு நடந்தது. இதில் திஸ்பூர் தொகுதியும் அடங்கும்.

கடந்த இரண்டு நாள்களாக பிரதமர் இங்கு வந்து பிரசாரம் செய்தார். மக்களிடம் தவறாமல் தேர்தலில் வாக்களிக்குமாறு கேட்டுக்கொண்டார். ஆனால் அவரே தேர்தலில் வாக்களிக்கத் தவறிவிட்டார் அது ஏன் என்று தெரியவில்லை. மாநிலங்களவைக்குத் தெரிவு பெறுவதற்காக மட்டும்தான் அவர் இத்தொகுதி வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றாரா? தொகுதியில் தேர்தல் என்றால் அவர் இங்கு வந்து வாக்களிக்கவேண்டாமா என்கின்றனர் திஸ்பூரைச் சேர்ந்த மக்கள்.

பிரதமர் வாக்களிக்காததால் ஒரு கேள்வி எழுந்துள்ளது. அதாவது வாக்களிப்பது நமது உரிமையா அல்லது கடமையா என்பதுதான் அது. வாக்களிக்கும் கடமை சாதாரண மக்களுக்குத்தான் இருக்கிறதா? ஏன் பிரதமருக்கு அந்தக் கடமை இல்லையா என்று கேட்கிறார் அருணா கலிடா என்ற அஸாம் வாசி. கடும் மழையையும் பொருட்படுத்தாது வந்து வாக்களித்துள்ளார். இவர்.

1991 இல் பிரதமர் மன்மோகன் சிங் அஸாம் மாநிலத்திலிருந்துதான் மாநிலங்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1998 மக்களவைத் தேர்தலில் மட்டும்தான் அவர் வாக்களித்தார். 1991, 1996 மற்றும் 2001 இல் நடைபெற்ற சட்ட பேரவைத் தேர்தலில் அவர் வாக்களிக்கவில்லை என்று தேர்தல் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)(22)

## திருப்புமுனையை ஏற்படுத்தும் தேர்தல் என்கிறார் வைகோ



திண்டுக்கல்,ஏப்.5

நடைபெறவுள்ள சட்டப் பேரவைத் தேர்தல் தமிழக அரசியல் சரித்திரத்தில் திருப்புமுனையை ஏற்படுத்துவதாக அமையும் என ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கூறினார்.

நிலக்கோட்டை சட்டப் பேரவைத் தொகுதி அ.தி.மு.க. வேட்பாளர் தேன்மொழி சேகரன், ஆத்தூர் தொகுதி அ.தி.மு.க.வேட்பாளர் திண்டுகல் சி.சீனிவாசன் ஆகியோரை ஆதரித்து வத்தலகுண்டு, ஆத்தூர், செம்பட்டி ஆகிய ஊர்களில் வைகோ திங்கட்கிழமை பிரசாரம் செய்தார். அவர் அப்போது கூறியதாவது:-

ஒரு கூட்டணியில் இருந்துவிட்டு வேறொரு கூட்டணிக்குச் சென்றுவிட்டாரே என்ற கேள்வி எழுவது இயற்கை. எந்த முடிவை எடுத்தாலும் அதனை மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கருதுபவன் ஜனநாயகவாதி அல்லன். எனவேதான் என்னுடைய முடிவிற்கு என்ன காரணம் என்பதை பொதுமக்களிடம் விளக்கிவருகிறேன். பொதுமக்களும் அதனை முழுமையாக ஏற்றுக்கொண்டுள்ளனர். தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தி.மு.க.எந்தவகையில் எல்லாம் பழிவாங்கியது என்பதை விளக்கி இருந்தேன். திரைப்பட இயக்குநர் பாலச்சந்தர் பேட்டியைக் கேட்டுவிட்டு என்னைப் பாராட்டியதுடன் நான் அரசியலுக்கு அப்பாற்பட்டவன். உங்கள் அரசியல் வாழ்க்கையை இழந்து விடுவீர்களோ என்று நினைத்தேன். நல்ல முடிவை எடுத்திருக்கிறீர்கள் என்று கூறினார்.

அ.தி.மு.க. தலைமையிலான கூட்டணி 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றிபெறும் இதனை அறிந்துதான் தி.மு.க.சாத்தியமற்ற வாக்குறுதிகளை வழங்கியுள்ளது என்றார் வைகோ

(ஐ)(22)

## அஸாம் தேர்தலில் 68 சதவீத வாக்குப் பதிவு

அஸாமில் முதற்கட்டமாக திங்கட் கிழமை நடந்த தேர்தலில் 68 சதவீத வாக்குகள் பதிவாகின. தேர்தலில் வன்முறைச் சம்பவங்கள் நடந்ததாக தகவல் இல்லை.

மாநிலத்தில் மொத்தம் 126 தொகுதிகள் உள்ளன. முதற்கட்டத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி முதல்வர் தருண் போகோய் போட்டியிடும் திதாபூர் தொகுதி உட்பட 65 தொகுதிகளுக்கு வாக்குப்பதிவு நடைபெற்றது. இதில் வாக்களிக்க 45 லட்சம் பெண்கள் உட்பட 92 லட்சம் பேர் தகுதி உடையவர்கள். இவர்களில் 68 சதவீதம் பேர் வாக்குரிமை செலுத்தினர். மாலை 4 மணிக்குப் பிறகு யாரும் வாக்குச்சாவடிகளுக்கு செல்ல அனுமதிக்கப்படவில்லை.

காலை முதல் பிற்பகல் வரை பல இடங்களில் மழை பெய்தபோதிலும் வாக்குரிமையை செலுத்த ஏராளமானோர் விரும்பி வந்தனர். தடைசெய்யப்பட்ட 'உல்பா' போன்ற தீவிரவாத அமைப்புகள் இந்தத் தேர்தலில் தலையிடவில்லை. அஸாம் மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற ஆர்வம் காட்டும் கட்சிகளுக்கு வாக்குப் போடும்படி வாக்காளர்களை கேட்டுக் கொண்டார் உல்பா தலைவர் அரவிந்த ராஜ் கோவா. 65 தொகுதிகளில் மொத்தம் 515 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். இரண்டாம் கட்டமாக மீதியுள்ள 61 தொகுதிகளுக்கு ஏப்ரல் 10ஆம் திகதி தேர்தல் நடைபெறுகிறது. (ஐ)(22)




## தவக்காலச் சிந்தனை 36

### சுயநலமற்றவர்களாய் இறைவனுக்காக வாழுங்கள்

"இன்னும் நீங்கள் என்னை உணராவிட்டால் அதை உணரும் காலம் வெகு தொலைவில் இல்லை."

நான் ஆபிரகாம் வழி மரபினர் என்று கூறிக்கொண்டு வாழ்வில் ஏது பலன். அதற்கேற்றவாறு வாழவேண்டும். நான் மரவு வழியை போர்வையாகக் கொண்டு பேய்களின் வழிகாட்டலின் கீழ் வாழ்வதில் ஏது பலன். இது எம்மையும் ஏமாற்றி சமூகத்தையும் ஏமாற்றுவது போல் ஆகிவிடுகின்றது. இதனால் பாதிப்படைவது இறுதிநாளில் நாமே. இதை உணராமல் மனம்போன போக்கில் வாழ்கின்றோம். இறைவழிபாடுகளை கேலியாக எண்ணுகின்றோம். வீணான நேர செலவீடு எனக் கருதுகின்றோம். ஆகவேதான் தற்கால சமுதாயம் சீரழிவுப் பாதையை நோக்கி பயணிப்பதை அவதானிக்க முடிகின்றது.


எனவே என் அன்பிற்கினிய உள்ளங்களே உங்களிடம் வேண்டுவது யாதெனில் இறைவனுக்காக வாழுங்கள். சுயநலமற்றவர்களாக வாழுங்கள். எதைச் செய்தாலும் இறைவனை மனதில் எண்ணிச் செயற்படுங்கள். மற்றவர்களின் கருத்துக்களுக்கு இடங்கொடுங்கள். உங்கள் பிள்ளைகளை இறையன்பின் கீழ் வழிநடத்துங்கள். அப்போதுதான் நீங்கள் வாழ்வின் நிறைவை அடைவீர்கள். எதிர்கால சந்ததியினர் உங்களை அரவணைக்க வேண்டுமெனில் அவர்கள் மேல் அன்பாய் இருங்கள். இறை கட்டளைகளை கடைப்பிடியுங்கள். மற்றவர்களுக்கும் கற்றுக்கொடுங்கள். வாழுங்காலங்களில் வாழ்வில் இறைவனைக் காண பொறுமையுடன் அனைத்தையும் ஏற்று வெற்றி மாலை சூட உங்களைத் தயார்படுத்திக் கொள்ளுங்கள்.

வி.ஜீவோஜெக்சன், நெடுந்தீவு. (32)











மிதிவெடி செயற்பாட்டின் விழிப்புணர்வுக்கும் பங்களிப்புக்குமான சர்வதேச தின வைபவமும் மிதிவெடி செயற்பாடுகள் தொடர்பான கண்காட்சியும் நேற்று யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

யாழ்.மிதிவெடி செயற்பாட்டு அலுவலக அதிகாரி எல்மோ ஆனந்தராஜா, யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், மிதிவெடி அபாயக் கல்வித் திட்ட இணைப்பாளர் நேசராஜா ஆகியோரையும் இந்நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் காட்சிப்படுத்தப்பட்டுள்ள வெடி பொருள்களையும் மாணவர்களுக்கு மிதிவெடி அபாயம் தொடர்பாக விளக்கமளிப்பதையும் படங்களில் காணலாம்.

*(படங்கள் : ஒளிஅதிரன்)*

## பாடசாலை பெயர் வளைவு திறப்பு விழா நாளை

மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட பெயர் வளைவு நாளை திறந்துவைக்கப்படவுள்ளது.

வித்தியாலய அதிபர் கு.கதிர்காமசேகரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு பெயர்வளைவினைத் திறந்துவைப்பார். வித்தியாலய பழைய மாணவியான திருமதி யோகேஸ்வரி சுப்பிரமணியம் இந்தப் பெயர் வளைவினை அன்பளிப்பாக வழங்கியிருந்தார். (த-117)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாட சாலை ஆசிரியை திருமதி **ஜெயக்குமாரி ஜயானந்தன்** அவர்களின் அன்புத் தந்தை

**சின்னப்பு பொன்னுத்துரை**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**
**யா/நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை, மானிப்பாய்.**

(26.11.14) (48978)

## ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம் வாக்காளர் இடாப்பு முடுதல்

31-03-2006 முடிவடைந்த காலப் பகுதிக்கான வாக்காளர் இடாப்பு மூடப்பட்டுள்ளது. இவ் இடாப்புக்கள் அங்கத்தவர்களின் ஆட்சேபனைகளைப் பெறுவதற்காக 05-04-2006 தொடக்கம் 20-04-2006 வரை கிளைகளில் பார்வைக்குவைக்கப்பட்டுள்ளது.

மேற்படி

கிளை-3 இற்கான வாக்காளர் பட்டியல் கிளை 4 இலும்
கிளை-5 இற்கான வாக்காளர் பட்டியல் தலைமை அலுவலகத்திலும்
கிளை-11 இற்கான வாக்காளர் பட்டியல் கிளை-10 இலும்
கிளை-12 இற்கான வாக்காளர் பட்டியல் கிளை-6 இலும்

பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது என்பதையும் அறியத் தருகின்றோம்.

அங்கத்தவர்கள் ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் 20.04.06 இற்கு முன் எழுத்து மூலம் தலைமை அலுவலகத்திற்கு தெரியப்படுத்தி வாக்காளர் இடாப்பைப் பூர்த்திசெய்ய உதவும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**செயலாளர்,** (சி/48699)(26.11.14)
**ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்.**

## சேவை நலன் பாராட்டு விழா

பாராட்டுப் பெறுபவர்:

**கலாநிதி கலாவதி பிரகதீஸ்வரசர்மா**



*(ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர்.ஆரம்பக் கல்வி நல்லூர் கோட்டம் - யாழ்ப்பாணக் கல்வி வலயம்)*

காலம் : 05.04.2006 புதன்கிழமை பி.ப.3.30 மணி

இடம் : யா/ கல்வியங்காடு இந்து தமிழ்க்கலவன் பாடசாலை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**ஆரம்பக் கல்வித்துறை,**
**நல்லூர்க் கோட்டம்.**
*யாழ்ப்பாணக் கல்வி வலயம்.*

## பாடசாலை நூலகங்களுக்கு நூல் விநியோகம்

யாழ்ப்பாணம், ஏப்.5

யாழ். காட்டப் பாடசாலைகளுக்கென கல்வி அமைச்சும் யுனிசெவ் நிறுவனமும் இணைந்து வழங்கிய 'பாடசாலை நூலகங்களுக்குரிய நூல்கள்' நாளை வியாழக்கிழமை நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன. அனைத்து பாடசாலை அதிபர்களையும் காலை 9 மணிக்கும் நண்பகல் 12 மணிக்கும் இடையே மேற்குறிப்பிட்ட இடத்திற்கு வருகை தந்து நூல்களைப் பொறுப்பேற்றுக் கொள்ளுமாறு யாழ்.கோட்டக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(ஐ-203)

## கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய அலுவலக ஊழியரான

**திரு.செல்லையா முருகவேள்**

அவர்கள் இறைபதம் எய்தியதையிட்டு மிகுந்த மனவேதனை அடைகின்றோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**
**யா/கோக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தி.**

(48976)(32.26.11)


# ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6579163 முதல் 6589091 வரை. சீட்டிழுப்பு இல. 225 திகதி 03-04-2006

வெற்றி எண்கள்

**5 2 7 0 3 8** சுப்பர் எண **10**

ஜக்பொட் பரிசு ரூ. **11,565,775/-** வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | 0 | 11,565,775/= | - |
| இடது பக்கமிருந்து முதல் 6 எண்கள் | 01 | 1,000,000/= | 1,000,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 09 | 50,000/= | 450,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 85 | 5,000/= | 425,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 867 | 500/= | 433,500/= |
| இடது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8702 | 50/= | 435,100/= |
| இடது பக்கமிருந்து முதல் 1 எண் | 86183 | 10/= | 861,830/= |
| வலது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/= | 45,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 85 | 1,000/= | 85,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 868 | 100/= | 86,800/= |
| வலது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8618 | 20/= | 172,360/= |
| | | மொத்தம் ரூ. | **3,994,590/=** |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/= | 602,600/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை **4,597,190/-**

ரூ. 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| திருகோணமலை | 6583386-8-84 |
| பொலன்னறுவ | 6580785-8-51 |
| நுவரேலியா | 6580963-4-17 |
| புத்தளம் | 6588918-0-68 |
| அம்பாறை | 6585066-6-39 |
| மட்டக்களப்பு | 6584943-8-33 |
| கொழும்பு | 6584597-7-24 |
| இரத்தினபுரி | 6583437-8-63 |

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. **11,807,575/-**

தொடர் இல. 7496064 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2006 ஏப்ரல் 06 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.


## மரண அறிவித்தல்



### திருமதி செல்வராசா சரஸ்வதி

108/9, கச்சேரி-நல்லூர் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராசா சரஸ்வதி அவர்கள் 02-04-2006 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் செல்வராசாவின் (J.P.) அன்பு மனைவியும் செல்வகுமார் (ஜேர்மனி), கிருஷ்ணகுமார் (லண்டன்), துஷ்யந்தி, சசிகலா, குணாழினி ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற கந்தையா, நாகரத்தினம் ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கனகசிங்கம், சின்னப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகளும் அருளானந்தம்(மாநகரசபை, யாழ்ப்பாணம்), மகேந்திரன் (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சியாமளா(ஜேர்மனி), பிரபாகரன் (சௌமியா ரெக்ஸ், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மருமகளும் மதிசூதன், செந்தமிழ்மணன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் திரு.திருமதி திருநாவுக்கரசு (சித்தன் கேணி), திருமதி ஐயாத்துரை (இணுவில் கிழக்கு) அவர்களின் அன்பு மைத்துனியும் திருமதி தம்பையா இராசம்மா (மூத்தவிநாயகர் வீதி) அவர்களின் பெறாமகளும் திருமதி ரகு ராணி அவர்களின் ஒன்றுவிட்ட சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(06-04-2006) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**108/9, கச்சேரி-நல்லூர் றோட்,**
**நல்லூர்.**

தகவல்:
**க.செல்வராசா** J.P. *(கணவர்).*

(48985)(26.11.14)

புத்தாண்டை முன்னிட்டு திருமுருகன் கொம் நெற் வழங்கும் விசேட சலுகைகள்

FedEx Express

இன் புத்தாண்டு விசேட சலுகைகளை நீங்கள் அனுப்பும் கடிதங்கள், பொதிகள் எவையாயினும் 10% விசேட சலுகைகளுடன் முதலாம் பரிசு தங்க நாணயம் மற்றும் 10 ஆறுதல் பரிசுகள்

சுவிஸ்லாந்துக்கான 5kg பொதி ஒன்றிற்கு 1kg க்கான கட்டணம் 650/=

லண்டனுக்கான 5kg பொதி ஒன்றிற்கு 1kg க்கான கட்டணம் 500/=

குறிப்பு: இந்தச் சலுகை புத்தாண்டு வரை மட்டுமே.

திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். Tel - 021 222 7835 Fax - 021 222 7836

வாடிக்கையாளர்களுக்காக தினசரி காலை 7.00 மணிமுதல் இரவு 10.00 மணிவரை எமது சேவை நடைபெறுகின்றது.

யாழ். நகரில் இவை அனைத்தும் திருமுருகன் கொம் நெற்றில் மட்டும்


# மரண அறிவித்தல்

## திருமதி நவரெட்ணம் மாணிக்கம்



புளியங்கூடலைப் பிறப்பிடமாகக் கொண்ட நவரெட்ணம் மாணிக்கம் அவர்கள் 03.04.2006 திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - முத்தம்மா தம்பதியரின் அன்பு மகளும் தில்லையம்பலம் - சிவகாமி தம்பதியரின் அன்பு மருமகளும் நவரெட்ணத்தின் அன்பு மனைவியும் ஜெயமங்களசிரோன்மணி (வவா), லீலாதேவி, லலிதாதேவி, லாதாதேவி, ஜெயபாலன், ஜெயச்சந்திரன், றஜ்கலா, விஜிகலா ஆகியோரின் பாசமிகு தாயும் பாலசுப்பிரமணியம், கணேசலிங்கம், ஜெகநாதன், புண்ணியமூர்த்தி, நிலானி, றஞ்சினி, ஜெயசீலன், சர்வேஸ்வரன்ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான சண்முகம், இராசரெத்தினம், நாகரெத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான திருகாம்பி, இராஜரெத்தினம் மற்றும் திலகவதி, செல்லம்மா, அன்னபூரணம், சிவசுப்பிரமணியம், காலஞ்சென்ற அருளம்பலம் மற்றும் சிவபாதசுந்தரம், காந்தமலர், காந்திமதி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் நிரோஜன், நிவாகர், நிதர்சன், டாலி, கஜீபன், மீரா, தசாங்கனி, நவீனா, காலஞ்சென்ற சாஜினா மற்றும் நர்மிதா, கம்சாஜினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.04.2006) புதன்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக புளியங்கூடல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள். அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நடராசா வித்தியாசாலை அருகில்,
புளியங்கூடல். (48988) (54-45-12)

தகவல்:
தி. நவரெட்ணம் (கணவர்).

# மரண அறிவித்தல்

## திருமதி மகேஸ்வரி நடராசா



வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு கேணியடியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி நடராசா அவர்கள் நேற்று முன்தினம் (03.04.2006) திங்கட்கிழமை காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேணியடி,
கொக்குவில்மேற்கு,
கொக்குவில். (48997) (18-54-45-12)

தகவல்:
ந.இரத்தினம்
(சிவபாலு - மகன்).


ராஜா யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
ஸ்ரீகாந், மீராஜஸ்மின், கருணாஸ் நடித்த
மெர்க்குரிப் பூக்கள்
காட்சி நேரம் மாற்றப்பட்டுள்ளது
10.30, 2.30, 6.30, 9.00, (பு.நே.) சீக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

நாகம்ஸ் சுன்னாகம்

இன்று முதல்
விஜயகாந்த் நடித்த
சுதேசி
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

பரத், சந்தியா
நடித்த
காதல்
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
தினசரி நான்கு காட்சிகள்

உடன் தேவை

★ ஓப்செற் மிஷின் (HAMADA) மைண்டர்
★ தமிழ் Typing, Corel Draw தெரிந்தவர்கள்

உடன் தேவை. அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம். உடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

முத்து பிறின்டேர்ஸ்
38/1, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம். 077-3068736


# பணிநிலை வேண்டுகை

கீழ்வரும் பணிநிலைகளுக்குத் தகைமையுடையவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தகைமையுடையவர்கள் தங்களது தன் வரலாறடங்கிய (சுயவிவரம்) வேண்டுகைகளை 12.04.2006 ஆம் நாளுக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கவும்.

**பணிநிலை**

01. ஆய அலுவலர் (ஆண்கள்)
02. ஆய உதவியாளர் (ஆண்கள்)
03. சமையலாளர் (ஆண்கள்)
04. சமையல் உதவியாளர் (ஆண்கள்)
05. கடின உழைப்புச் சிற்றூழியர் (ஆண்கள்)

**தகைமை**

பணிநிலை: 01. க. பொ. த. (உ/த) பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.
02. க. பொ. த. (சா/த) பரீட்சையில் குறைந்தது 04 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.
03. உள்நாட்டு உணவு வகைகள் தயாரிப்பதில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.
04. சமையல் உதவியாளர் பணியில் பட்டறிவு இருத்தல் வேண்டும்.
05. ஆண்டு-07 கற்றிருப்பதுடன் சிற்றூழியர் பணியில் மூன்றாண்டு (03) பட்டறிவு இருத்தல் வேண்டும்.

**வேண்டுகை அனுப்பவேண்டிய முகவரி**

மேலாளர்,
ஆளணிப் பிரிவு,
ஆயப்பகுதி,
கிளிநொச்சி.

**நேர்முகத்தேர்வு நடைபெறும் நாள்**

12.04.2006 புதன்கிழமை
காலை 10 மணி

**நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம்**

நடுவப்பணியகம்
ஆயப்பகுதி,
கிளிநொச்சி.

குறிப்பு: * தகுதிக்கேற்ப ஊதியம் வழங்கப்படும்.
* நேர்முகத் தேர்வுக்கு அழைப்பிதழ் அனுப்பப்படமாட்டாது. பணிநிலை வேண்டுகைகளை அனுப்பிவைக்காதோரும் தகைமைச் சான்றிதழ்களுடன் நேர்முகத் தேர்வுக்குச் சமுகமளிக்கலாம்.

(அ-48705) (54-45-12)

மேலாளர், ஆளணிப்பிரிவு,
ஆயப்பகுதி.

## மிதிவெடி விழிப்புணர்வு தினம்

அக்கராயன்,ஏப்.5 சர்வதேச கண்ணிவெடி விழிப்புணர்வு நடவடிக்கைக்கான உதவிக்கான தினம் நேற்று கிளிநொச்சியில் அனுஷ்டிக்கப்பட்டது.

வெண்புறா நிறுவனமும் 'யுனிசெவ்' நிறுவனமும் இணைந்து நடத்திய இந்த நிகழ்வில் காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி மத்தியகல் லூரியில் ஆரம்பமானது. வெண்புறா நிறுவனத் தலைவர் ஜெயகுலராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகன், 'யுனிசெவ்' நிறுவன வதிவிடப் பிரதிநிதி வெனி புறூஸ் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

கண்ணிவெடி விழிப்புணர்வு தொடர்பான கண்காட்சி ஒன்று அங்கு திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் மாணவர்கள், பொதுமக்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர். (த-420) (24)

# கண்ணீர் அஞ்சலி

வலயக் கல்வி அலுவலகம், தீவகம் வேலணையில் எம்மோடு கடமைபுரியும் திரு. செல்லையா றஞ்சன் அவர்களின் அன்புச் சகோதரன்

## அமரர் செல்லையா முருகவேள் அவர்கள்

(ஞானபண்டித வித்தியாலயம், கொக்குவில்)

அமரத்துவம் அடைந்தமையையிட்டு எமது கண்ணீர் அஞ்சலிகளைச் செலுத்துவதுடன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிக் கழகம்,
வலயக் கல்வி அலுவலகம்,
தீவகம் - வேலணை.

(48996) (54-45-12

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தெய்வானை கணபதிப்பிள்ளை

சரசாலை மத்தி, சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி தெய்வானை கணபதிப்பிள்ளை அவர்கள் நேற்று(04.04.2006) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் கணபதிப்பிள்ளையின் மனைவியும் காலஞ்சென்ற சரவணை, கணபதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் தங்கராசா, சிவராசா, தனலட்சுமி, திலகவதி, சரஸ்வதி (கொலண்ட்) ஆகியோரின் அன்புத் தாயும் கதிர்காமநாதன் (லண்டன்), ஞானசீலன், சிறிதரன் (கொலண்ட்),சிவயோகமலர், குணேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியும் பிரபாகரன்(லண்டன்), பகீரதி (லண்டன்), பகீதரன் (லண்டன்), பகீகரன், பகீஷா, தர்சியா, கஜீபா, துபாரகா, ஜனோயன், கிரிசாந், சஞ்சீவன், சகிலன், விதுஷன், நிதுஷன், ஷாருஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சயந்தீன் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(05.04.2006) புதன்கிழமை அவரது இல்லத்தில் மு.ப. 11 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சரசாலை மத்தி,
சாவகச்சேரி. (48993) (18-54-45-12)

தகவல்:
க.சிவராசா(மகன்).

## செல்லையா முருகவேள்



சரவணை கிழக்கு, வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்லையா முருகவேள் (பாடசாலைப் பணியாளர் - யா/கொக்குவில் ஞானபண்டித வித்தியாசாலை) அவர்கள் நேற்று(04.04.2006) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா-மனோன்மணி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் யோகேஸ்வரியின் அன்புக் கணவரும் (தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை), கேமரூபா, செந்தூரன், மயூரன் (கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் இந்திராணி (பிரதேச செயலகம் - நல்லூர்), ரஞ்சன் (வலயக் கல்வி அலுவலகம் வேலணை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(05.04.2006) புதன்கிழமை நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3 மணிக்கு திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

17/8, அம்மன் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
திருநெல்வேலி. (48990) (54-45-12)

தகவல்:
செ.ரஞ்சன்
(சகோதரன்).

## நாகேசு இராசேந்திரன் (வாசு)

நயினாதீவு, 5ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் டென்மார்க்கை வசிப்பிடமாகவும் கொண்டநாகேசு இராசேந்திரன் (வாசு) அவர்கள் 03-04-2006 திங்கட்கிழமை டென்மார்க்கில் காலமானார்.

அன்னார் வசந்தமலரின் அன்புக் கணவரும் சாரங்கன், பானுஜா, பாருதி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற குமாரசாமி நாகேசு-சின்னத்தங்கச்சி தம்பதியரின் மகனும் S.R. முத்தையா- காலஞ்சென்ற சவுந்தரம் தம்பதியரின் பாசமிகு மருமகனும் பரமேஸ்வரி, இராஜேஸ்வரி, நிமலேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிவநேசன், நேசமலர், சிவபாலன், (யாழ்தபாலகம்), சிவறஞ்சன் (கனடா), வசந்தராணி (கனடா), பகீரதன் ஆகியோரின் மைத்துனருமாவார். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

நயினாதீவு - 5. (48977) (54-45-12)

தகவல்:
ஆ.சுப்பிரமணியம் (ஊசிமாமா)
(மைத்துனர்).

## திருமதி சின்னத்துரை அன்னப்பிள்ளை



சங்கத்தானை, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் உலாந்தா வளவு கல்வயலை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் வேலுப்பிள்ளை சின்னத்துரை (செல்லத்துரை வாத்தியார்) அவர்களின் அன்பு மனைவி திருமதி சின்னத்துரை அன்னப்பிள்ளை அவர்கள் 04.04.2006 செவ்வாய்க்கிழமை அதிகாலை 3 மணிக்கு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம் (பூநகரி ப. நோ.கூட்டுறவுச் சங்கமுகாமையாளர்) அவர்களின் அன்புச் சகோதரியும் கமலாம்பிகை, யோகாம்பிகை, சுந்தரவல்லி (யா/சந்திர மௌலீச வித்தியாலயம் சங்கீத ஆசிரியர்), இராசலட்சுமி (ஜேர்மனி), சிவயோகம், சிவகுமாரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் குலசேகரம், ஆனந்தராசா, சிவராசா, யோகநாதன், கேதாரகௌரி ஆகியோரின் அன்பு மாமியும் அபிராமி, சசிந்தா, முகுந்தன், கோகுலன், அபிசா, மதுசா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டிமயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உலாந்தாவளவு
கல்வயல், சாவகச்சேரி. (48989) (54-45-12)

தகவல்:
குடும்பத்தினர்.
T.P.: 0776241563

## ஜனாதிபதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலர் பலிஹக்கார தலைமையிலான குழுவொன்று இந்தியா புறப்படவுள்ளது. இக்குழு இந்திய வெளியுறவுத்துறை முக்கியஸ்தர்களைச் சந்திக்கவுள்ளது.

இந்தக் குழு பாகிஸ்தானுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேற்கொண்ட விஜயம் குறித்து இந்திய வெளியுறவுத் துறைக்கு விளக்கமளிக்குமென முன்னதாகக் கூறப்பட்டது. ஆனால், இதனை நேற்று மறுதலித்த வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள், அதிகாரிகளின் இந்த விஜயம் வழமையான ஒரு சந்திப்பு நடவடிக்கையின் அம்சம் எனத் தெரிவித்தன. (க)

## ரணிலுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பினரான மஹிந்த விஜே சேகரவை, கட்சி அமைப்பாளர் மற்றும் செயற்குழு உறுப்பினர் பதவிகளில் இருந்து கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நீக்கியமையையடுத்தே மேற்படி கூட்டம் நடத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியில் மஹிந்த விஜே சேகர வகித்த பொறுப்புகளை மீண்டும் அவருக்குப் பெற்றுக் கொடுப்பதற்குப் போராடுவதென்றும், ஐக்கிய தேசியக் கட்சியில் முழுமையான மறுசீரமைப்பொன்றைச் செய்து கட்சித் தலைமைத்துவத்தை மாற்றுவதென்றும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாத் தெரிகிறது.

புதுடில்லிக்கான விஜயமொன்றை மேற்கொண்டுள்ள ஐ.தே.க. தலைவருக்கு இந்த இரகசிய மந்திராலோசனை குறித்து நேற்றைய தினம் அறிவிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஐ.தே.க. தலைவர் நாடு திரும்பிய பின்னர் கட்சி மறுசீரமைப்பு தொடர்பான புதிய யோசனையொன்றை முன்வைப்பார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (க-3)

## வடமராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பருத்தித்துறை நீதிமன்றத்தில் மீனவர்கள் ஐவரும் நேற்றுமுன்தினம் ஆஜர்ப்படுத்தப் படலாம் என்றும் -

அப்போது அவர்கள் பிணையில் விடுவிக்கப்படலாம் என்றும் - நம்பியே தாங்கள் வந் தனர் என்று மேற்படி குடும்பத்தினர் தெரிவித்தனர்.

இந்நிலையிலேயே மீனவர்கள் ஐவரும் கொழும்புக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளனர் என்ற தகவல் வெளியாகியுள்ளது.(ஒ-70)

## இன்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, இன்று கிளிநொச்சிக்கு வரவுள்ள போவர், அங்கு விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் உட்பட புலிகளின் முக்கியஸ்தர்களை சந்திக்கவுள்ளார்.

நாளை ஒரு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வரும் எரிக் சொல்ஹெய்ம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்திக்கும்போது ஹன்ஸன் போவர் உடனிருப்பாரெனத் தெரிவிக்கப்படுகிறது. (க)

## திறப்பு விழா

கரவெட்டி, ஏப்.5

கரவெட்டி சரஸ்வதி மகளிர் வித்தியாலயத்தில் மின் இணைப்பு ஆரம்ப நிகழ்வும் குடிதண்ணீர்த் தாங்கி திறப்பு விழாவும் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு நடை பெறும்.

அதிபர் சி.வல்லிபுரம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் கலந்துகொள்வார்.(ஒ-70-204)(18)

## வவுனியாவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோரிக்கையை முன்வைத்து இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டத்தில் தமிழ், முஸ்லிம், சிங்கள முன்பள்ளிகளைச் சேர்ந்தவர்களும் ஈடுபட்டனர்.

பேரணியில் கலந்துகொண்டவர்கள் வவுனியா அரச செயலகத்தில் வவுனியா மாவட்ட அரச அதிபர் சின்னத்தம்பி சண்முகத்திடம் ஜனாதிபதிக்கான கோரிக்கை மனுவைக் கையளித்தனர். (ஒ-14)

## அமைதிக்க...க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்குமென்றும் சோனியா காந்தி இந்தச் சந்திப்பின்போது உறுதியளித்திருக்கின்றார். இலங்கை - இந்திய உடன்படிக்கையின் கீழ் இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி எடுத்த முயற்சிகளைப் போற்றும் வகையில், ராஜீவ் காந்தி ஞாபகார்த்த செயற்திட்டங்கள் இலங்கையில் முன்னெடுக்கப்படும் என ஐ.தே.க. தலைவர் இந்தச் சந்திப்பின் போது தெரிவித்துள்ளார்.

ஐ.தே.க. தலைவர் நேற்றுமுன்தினம் பாரதிய ஜனதா கட்சியின் தலைவர்களான எல்.கே. அத்வானி, அடல்பிஹாரி வாஜ்பாய் ஆகியோரையும் சந்தித்துப் பேச்சு நடத்தினார். (க)

## படையினரின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை பருத்தித்துறைப் பகுதியைச் சுற்றிவளைத்த ஸ்ரீலங்காப் படைகள், ஹாட்லிக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர்கள் இருவரைக் கைதுசெய்து தடுத்துவைத்து சித்தரவதை செய்து வருகின்றது. இதன்மூலம் மாணவர்களை மிக மோசமான உளவியல் பாதிப்புகளுக்கு இராணுவம் உள்ளாக்குகின்றது. கைது செய்யப்பட்ட மாணவர்கள் இருவரும் அடுத்தமாதம் இடம்பெறவுள்ள உயர்தரப் பரீட்சையில் தோற்றவுள்ளனர்.

எனவே, ஸ்ரீலங்கா இராணுவம் குறிப்பிட்ட மாணவர்களை உடன் விடுதலை செய்யவேண்டும். இல்லையெனில் தமிழ் மாணவர்களாகிய நாம் மாணவர் படையாக ஆயுதம் ஏந்தும் துர்ப்பாக்கிய நிலை உருவாகும். உடன் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்காவிட்டால், நாங்கள் இராணுவத்தினருக்கெதிராக வன்முறையில் இறங்க நேரிடும் என்று எச்சரிக்கின்றோம். - இவ்வாறு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ)

## மலையகக் கட்சிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களாகப் போட்டியிட்டுக் கூடுதல் வாக்குகளைப் பெற்றவர்களுக்கே அம்மன்றங்களின் உயர்பதவிகளை வழங்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்திருக்கிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் உள்ள பல உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தமது உறுப்பினர்கள் முக்கிய பதவிகளில் அமர்த்தப்பட வேண்டுமென்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கோரி வருகின்றது. ஆனால், அது சாத்தியமாகாத நிலைமையே இருப்பதாக ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறின.

இதேவேளை, நுவரெலியா மாவட்டத்தின் சில உள்ளூராட்சி மன்றங்களில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸைவிட கூடுதலான உறுப்பினர்களைப் பெற்றிருக்கும் மலையக மக்கள் முன்னணி அந்த மன்றங்களின் உயர் பொறுப்புகள் தம் கட்சிக்கே வழங்கப்பட வேண்டுமென்று கோரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் இந்த விவகாரம் குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் இவ்வார இறுதியில் பேச்சு நடத்தவுள்ளார் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (க)


**BEACON** (யாழ்.) நிறுவனத்தில்....... மாபெரும் 7 நாள்

**அளவையியல் கருத்தரங்கு**

*விரிவுரையாளர்: S.S.மனோகரன்*

* அலகு ரீதியான விரிவுரைகள்!
* ஒவ்வொரு அலகிலும் 3 மாதிரிப் பரீட்சைகள்!!
* பகுதி I இலும் பகுதி II இலும் தலா 5 வினாக்களைத் தெரிவு செய்வதற்கான வழிகாட்டல்கள்!!!

ஆரம்பம்: 18.04.2006 *காலை 8 மணி*

*குறிப்பு: 10.04.2006 இற்கு முன்னர் அனுமதி அட்டையையும், நேர அட்டவணையையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

(48968)(18-12-45)



**யாழ். வர்த்தகக் கண்காட்சி - 2006**

ஒருசில காட்சியறைகளே மீதமுள்ளன

உங்கள் இடத்திற்கு முந்துங்கள்

தொடர்புகளுக்கு:

0777 769751

(48983)(18-12-45)



**ஸ்ரீ பரராஜ சேகரப்பிள்ளையார் கோயில்**
**திருநெறிய தமிழ்மறைக் கழகம் நடத்தும்**
**பண்ணிசை மனனப்போட்டிகள் - 2006**

மேற்படி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு இக்கழகம் ஆண்டு தோறும் நடத்திவரும் பண்ணிசைப் போட்டிக்கு மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*விண்ணப்ப முடிவு திகதி : 15.04.2006*
*போட்டி நடைபெறும் நாள் : 07.05.2006 (ஞாயிற்றுக்கிழமை)*
*போட்டி நடைபெறும்நேரம்: காலை 9 மணி (இலங்கை நேரம்)*
*போட்டி நடைபெறும் இடம் : ஸ்ரீ பரராஜ சேகரப்பிள்ளையார் கோயில் மணி மண்டபம்.*

*திருமதி வை .கணேசபிள்ளை*
*ஒய்வுபெற்ற ஆசிரியர்,*
*தி.நெ.த.ம.கழகம் , இணுவில்.*

*தொடர்பு:*
*இணுவில் பொதுநூலகம்,*
*இணுவில் தெற்கு.*

(48704)(18-12-45)


## பேச்சில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

* இம்மாதம் ஜெனீவாவில் இடம்பெறவுள்ள பேச்சில் முஸ்லிம்களுக்குத் தனித்தரப்பு வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்துவது.
* முஸ்லிம்களின் நலன் தொடர்பாக எக்கருத்துகளை முன்வைப்பதாயினும் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் அனைவரும் ஒருமித்து - ஒரே கருத்தை - முன்வைக்க வேண்டும் என முஸ்லிம் அரசியல்வாதிகளுக்குக் கோரிக்கை விடுப்பது.
* வடக்கு - கிழக்கு மாகாண சபையில் அதிகமான முஸ்லிம் உத்தியோகத்தர்களை இணைக்க நடவடிக்கை எடுத்தல்.
* இம்மாதம் இடம்பெறவுள்ள சமாதானப் பேச்சில் முஸ்லிம்களுக்குத் தனித் தரப்பு வழங்கப்படாவிட்டால் அரச குழுவிலும் கூட முஸ்லிம் பிரதிநிதிகள் எவரும் கலந்துகொள்ளக்கூடாது என வற்புறுத்தல்.

- இவையே அக்கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட நான்கு தீர்மானங்களும் ஆகும்.

இதேசமயம், இராணுவத்தில் முஸ்லிம்களைக் கொண்ட தனிப் படையணி ஒன்றை அமைக்கும் திட்டத்துக்கும் முஸ்லிம்கள் மத்தியில் எதிர்ப்பு வலுக்கத் தொடங்கியிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

இவ்விடயம் குறித்து ஆராய்ந்து தீர்மானம் ஒன்றை எடுப்பதற்காகப் பல்வேறு கட்சிகளையும் சேர்ந்த முஸ்லிம் அரசியல்வாதிகளை நேற்றிரவு கொழும்பில் முக்கிய கூட்டம் ஒன்றுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்ஸில் அழைத்திருந்தது. (க)


**AIMS**

**Vacation @ AIMS**

விடுமுறையை பயனுள்ளதாக்குங்கள்

AIMS உடன் இணைந்து

மேலதிக விபரங்களுக்கு 08-04-06ற்கு முன்னர் அலுவலகத்தை அணுகவும்

*#118, பலாலி வீதி, தபாற்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி*

Center for FOSS & LAMP



**MCS Diploma in Auto CAD**
(With Manual Drawing)
பல்கலைக்கழக, திறந்த பல்கலைக்கழக, தொழில் நுட்பக்கல்லூரி மாணவர்களிற்கானது
*324, Palaly Road, Jaffna.*



**நீங்கா நினைவலைகள்**

41 ஆவது நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்தியமும | 2 ஆம் ஆண்டு நினைவலைகள்





அமரர் வேலாயுதம் தருமலிங்கம் | அமரர் தம்பு கந்தசாமி

*19.04.1940 ← தோற்றம் → 13.10.1918*
*24.02.2006 ← மறைவு → 03.04.2004*

ஆருயிரே எம் அன்பு தெய்வங்களே பாச அரவணைப்புகளே அன்பின் உறைவிடமே!
மாதங்கள் ஆண்டுகள் பல சென்றாலும் ஆறாது எம் துயரம்!
உங்கள் ஆத்மா சாந்தியடைய சந்நிதி முருகனை வேண்டி நிற்கிறோம்.

அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி   ந.முகவரி : வேலணை   -குடும்பத்தினர்.

(49000)(18-12-45)



**மரண அறிவித்தல்**

*இராமுப்பிள்ளை யோகநாதன்*



நீராவியடியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு, கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராமுப்பிள்ளை யோகநாதன் அவர்கள் நேற்று (04.04.2006) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமுப்பிள்ளை - இரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும் தம்பிப்பிள்ளை - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் சறோஜினிதேவியின் அன்புக் கணவரும் அகிலன்(டோகா), அகிலா, தர்ஷினி, பிரதீபன் (2005A/L கணிதப்பிரிவு கொக்குவில் இந்து) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பாடசாலை வீதி, கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.*
*தொ.பே.: 0777 593743,0779231694*

தகவல்:
பு.மயூரன்
(மருமகன்).

(46999)(18-12-45)





EXPOAIR எக்ஸ்போ எயார்

*your friend in the skies...*   வானத்தில் உங்கள் நண்பன்...



**தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை**

ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்

கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1

யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999

E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.04.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, 2006 மே

வெளியீடு 02

# மாதிரி வினாப்பத்திரம்

## இரசாயனவியல்

திரு. சி. சுதாகரன்.B.Sc. திருகோணமலை.

## பகுதி I

1. 1.1g புரதம் ஆனது $100cm^3$ நீரில் கரைக்கப்பட்டு கரைசலாக்கப்பட்டது இதன்போது அதனால் ஏற்படுத்துப்படும் அமுக்கமானது $25^\circ c$ 1.15kpa எனின் புரதத்தின் சார்மூலக கூற்றுத் திணிவு யாது? ($gmol^{-1}$)
I.2370 II.2360 III.23700 IV.2000 V.18500

2. எதனோயிக்கமிலத்தின் செறிவு $0.1moldm^{-3}$ சோடியம் எதனோவேற்றின் செறிவானது $0.3moldm^{-3}$ஆகவும் காணப்படும் தாங்கற்கரைசலின pH யாது? அமிலத்தின pka ஆனது 4.8
I.5.1 II.5.8 III.5.3 IV.6.4 V.2.8

3. கீழே தரப்பட்டுள்ள சேர்வைகளில் எந்த ஒழுங்கு அமில வலிமை அதிகரிக்கும் ஒழுங்கைக் காட்டுகிறது?
I. $CH_3CH_2OH<C_6H_5CH_2OH<H_2O<CH_3COOH<HCOOH$
II. $CH_3COOH<HCOOH<H_2O<C_6H_5-CH_2OH<CH_3CH_2OH$
III. $CH_3CH_2OH<H_2O<C_6H_5CH_2OH<CH_3COOH<HCOOH$
IV. $HCOOH<CH_3COOH<H_2O<C_6H_5OH<CH_3CH_2OH$
V. $CH_3COOH<H_2O<HCOOH<$ ⌬$-CH_2OH<CH_3CH_2OH$

4. ஆவர்த்தன அட்டவணையில் அலசன்களில் அணு எண் அதிகரித்தல் பற்றிய பின்வரும் கூற்றுக்களுள் எது பொய்யானது?
I. அலசன்களின் நீரில் கரையும் திறன் குறையும்.
II. இவற்றின் கொதிநிலை கூட்டத்தின் வழியே அதிகரிக்கும்.
III. இவற்றின் ஐதரைட்்களின் தாழ்த்தும் இயல்பு குறையும்.
IV. இவற்றின் ஐதரைட்டுகளின் வெப்ப உறுதி குறையும்.
V. இவற்றின் ஐதரைட்டுகளின் அமில இயல்பு அதிகரிக்கும்.

5. மூலவலிமை அதிகரிக்கும் ஒழுங்கு
I. $C_6H_5OH<NH_3<CH_3NH_2<CH_3CH_2NH_2<CH_3NHCH_3$
II. $NH_3<C_6H_5OH<CH_3NH_2<CH_3CH_2NH_2<CH_3NHCH_3$
III. $C_6H_5OH<NH_3<CH_3NH_2<CH_3NHCH_3<CH_3CH_2NH_2$
IV. $C_6H_5OH<NH_3<CH_3CH_2NH_2<CH_3NH_2<CH_3NHCH_3$
V. $NH_3<$ ⌬ $OH<CH_3CH_2NH_2<CH_3NH_2<CH_3-NH-CH_3$

6. 3d தொகுப்பு மூலகங்களைப் பற்றி பின்வரும் கூற்றுகளுள் பிழையானது?
I. Sc தவிர மற்றையவை யாவும் (+2) ஒட்சியேற்ற எண்ணை எடுக்கக் கூடியது
II. அடுத்துள்ள அயனாக்கற் சக்திகளின் சார்பளவிலான மாற்றம் உயர் பெறுமானம் கொண்டவையல்ல.
III. இவை யாவும் மாறுபட்ட ஒட்சியேற்ற எண்ணைக் காண்பிக்கக் கூடியன.
IV. இவற்றில் பரகாந்த இயல்பு கூடியது Cr
V. இலத்திரன் நிலையமைப்பை பொறுத்தவரையில் Zn ஆனது தாண்டல் மூலக மாகக் கருத முடியாது.

7. $Fe^{2+}$ கரைசலையும் $Fe^{3+}$ கரைசலையும் பண்பறி ரீதியில் வேறுபடுத்தி இனங்காணப் பின்வரு வனவற்றுள் எது பயன்படாது?
I. $K_4[Fe(CN)_6]$ II. $NH_4CNS_{(aq)}$ III. $NH_{3(aq)}$
IV. $K_3[Fe(CN)_6]$ V. $Hcl_{(aq)}$

8. பின்வரும் கற்றயன்களுள் எது i)மிகை $NH_4OH$ உடன் திண்ம விளைவைக் கொடுப்பதோடு ii)NaOH , $H_2O_2$ உடன் மஞ்சள் கரைசலைக் கொடுக்கும்?
I. $Zn^{2+}$ II. $Cu^{2+}$ III. $Cr^{3+}$ IV. $Ni^{2+}$ V. $Co^{2+}$

9. சில வெப்ப இரசாயனத் தரவுகள் கீழே தரப்பட்டுள்ளன.
$Ca_{(s)}$ இன் பதங்கமாதல் வெப்பம் $aKJmol^{-1}$
$Ca^{2+}_{(g)}$ இன் தோன்றல் வெப்பம் $bKJmol^{-1}$
$Ca_{(s)}$ இன் 2ஆம் அயனாக்கற் சக்தி $cKJmol^{-1}$
$Ca_{(g)}$ இன் முதலாம் அயனாக்கற் சக்தி யாது?
I. a – b- c II. b – a -c III. c – a -b IV. b+c-a V. a+b+c

10. $IF_7$ என்ற மூலக்கூறின் வடிவம்
I. ஐங்கோண இருகூம்பகம் II. சதுரகூம்பகம் III. சதுர இருகூம்பகம்
IV. எண்முகி V. முக்கோண இருகூம்பகம்

11. $S_2O_6^{2-}$ எனும் அயனில் உள்ள மையக் கந்தகத்தின் ஒட்சியேற்ற எண், வலுவளவு என்பன முறையே
I. 4,+4 II. +4, 6 III. +2, 6 IV. +5, 4 V. +5, 6

12. X எனும் சேதன சேர்வையை NaOH ஐப் பயன்படுத்தி நீர்பகுப்பு செய்த விளைவுக்கு அமிலம் சேர்க்கப்பட வெண்ணிற வீழ்படிவு தோன்றியது. வீழ்படிவிற்கு $Na_2CO_3$ சேர்க்க வாயுகுமிழிதோன்றியீது. எனினும் மற்றைய வடிதிரவத்திற்கு அற்கோலிக் KOH சேர்த்து குளோரோபோம் சேர்க்க சகிக்க முடியாத மணம் தோன்றியது எனின் X எனும் சேர்வை
|H ||O
I. $C_6H_5CH_2-N-C-CH_3$
||O |H
II. $C_6H_5-C-N-CH_2CH_3$
||O |H
III. $CH_3C-N-CH_3$
||O |H
IV. $CH_3-CH_2-C-N-C_6H_5$
||O
V. $C_6H_5-C-O-C_6H_5$

13. பியுட்டன்-1- ஐன் ஆனது பின்வருவனவற்றுள் எதனுடன் தாக்கமுறாது?
I. அமில $KmnO_4$ II. RmgX III. KOH
IV. தொலனின் சோ.பொ V. $NH_3$ சேர் $Cu_2cl_2$

14. A என்னும் சேதனச்சேர்வை பனிக்கட்டி அணமிந்த வெப்பநிலையில் $NaNO_2$ / HCl உடன் தாக்கமுறவிடும்போது $N_2$ வாயுவை உடனே தந்தது. இத்தாக்கத்தின் விளைவாகப் பெற்ற கரைசலானது KOH முன்னிலையில் பீற்றாநப்தோலுடன் ஒரு சிவப்புச்சாயத்தைத் தந்தது. A யாக இருக்கக் கூடிய சாத்தியக்கூறு மிகவும் கூடியது?
I $H_2NH_2C$-⌬-$CH_2NH_2$
II $NH_2$-⌬-$CH_2NH_2$
III $HOH_2C$-⌬-$CH_2OH$
IV $H_2NH_2C$-⌬-$CH_2OH$
V $N_2cl$-⌬-$CH_2NH_2$

15. ||O
$CH_3CH_2 - C = CH - CH\ C - cl$
| |
$NO_2$ Br
I 2 – bromo - 4 – Nitro - 3 – hexenoylchloride
II 5 – bromo – 4 – Nitro – 3 - hexenoylchloride
III 2 – bromo – 4 – Nitro – 3 – hexenoicacid
IV 2 – bromo - 4 – Nitro - 3 – hexenone
V 2 – bromo - 1 – chloro – 4 – Nitro - 3 - hexenone

16. 5 – bromo -4 – propyl – 4 – hexenoicacid இன IUPAC பெயருக்கு இசைவான கட்டமைப்பு
|Br |$CH_2CH_2CH_3$
I $CH_3 - C = C - CH_2CH_2COOH$
|Br
II $CH_3 - CH = C - CH - CH_2COOH$
|$CH_2CH_2CH_3$
|Br |$CH_2CH_2CH_3$
III $CH_3 - C = C - CH_2COOH$
|Br |$CH_2CH_3$
IV $CH_3 - C = C - CH_2CH_2COOH$
Br
V $CH_3 -C = CH - CH_2 - CH_2CH_2COOH$
$CH_2CH_2CH_3$

17. பின்வருவனவற்றுள் அமில இயல்பு அதிகரிக்கும் ஒழுங்கைக் காட்டுவது?
I. $SO_3 > N_2O_5 > cl_2O > H_2O > cl_2O_3$
II. $cl_2O_7 > SO_3 > N_2O_5 > cl_2O_5 > H_2O$
III. $N_2O_5 > SO_3 > cl_2O > H_2O > cl_2O$
IV. $SO_3 > N_2O_5 > cl_2O_3 > H_2O > cl_2O$
V. $N_2O_5 > SO_3 > cl_2O > cl_2O_3 > H_2O$

18. சம கனவளவான பின்வரும் நீர்க்கரைசல்கள் கலக்கப்படும் போது எது ஆகக்குறைந்த PH ஐ உடையது?
I 1M NaOH உம் 1M $CH_3COOH$ உம்
II 1M KOH உம் 1M Hcl உம்
III 1M $NH_4OH$ உம் 1M $H_2SO_4$ உம்
IV 1M $NH_4OH$ உம் 0.3M $H_2SO_4$ உம்
V 1M $NH_4OH$ உம் 1M $CH_3COOH$ உம்

19. ஓர் உப்பின் நீர் கரைசலுக்கு அ. ஐதான Hcl சேர்த்த பின் $H_2S$ வாயுவைச் செலுத்த மஞ்சள் நிற வீழ்படிவு பெறப்பட்டது.
ஆ. (அ) இல் பெறப்பட்ட வீழ்படிவு NaOH நீர்க்கரைசலில் கரையவில்லை. இ. (அ)இல் பெறப்பட்ட வீழ்படிவு செறி Hcl கரைந்தது. உப்பிலுள்ள கற்றயன்
I. $As^{3+}$ II. $cd^{2+}$ III. $Sn^{2+}$ IV. $Sn^{4+}$ V. $Sb^{3+}$

20. ⌬ → ⌬-$CH_2OH$ எனும் மாற்றீட்டிற்கு மிகப்பொருத்தமான தொடக்கக் கட்டம் பென்சீனுக்கு
I. செறி $HNO_3$ / செறி $H_2SO_4$ சேர்த்தல்
II $Br_2$ / Fe உடன் தாக்கம் புரியவிடல்
III $CH_3COcl$ / dry $Alcl_3$ சேர்த்தல்
IV $CrO_2cl_2$ சேர்த்தல்
V மேற்கூறப்பட்ட எதுவுமன்று.

21. பின்வரும் சேர்வைகளில் எது ஒளியியல் கேத்திர கணித சமபகுதியம் இரண்டையும் கொண்டுள்ளது?
I. $CH_3 - CH = CH - CH - CH_3$
|$CH_3$
II. $CH_3 - CH - CH = CH - CH_2CH_3$
|$C_6H_5$
III. $CH_3 - CH - CH = CH_2$
| $CH_3$
|$CH_3$
IV. $CH_2 - CH - CH = C - CH_3$
|Br
V. மேற்குறிப்பிட்ட எதுவுமன்று.

22. 0.335g மென்மையான ஒரு மூல அமில A 25ml 0.1M NaOH நீர்க்கரைசலை முற்றாக நடுநிலையாக்கியது எனின் A இன் சார்மூலக்கூற்றுத் திணிவாக அமையக்கூடியது? ($gmol^{-1}$)
I. 110 II. 138 III. 134 IV. 160 V. 90

23. குறித்த வெப்பநிலை ஒன்றிலே நீரின் Kw பெறுமானமானது $1x\ 10^{-12}$ moldm-6 ஆகும். $10^{-10}$ $moldm^{-3}$ செறிவுள்ள நீர் $CH_3COOH$ கரைசல் ஒன்றின் pH பெறுமானம் அதே வெப்பநிலையில் அண்ணளவாக
I. 10.1 II. 10 III. 9.9 IV. 7 V. 6

24. $K_3[Fe(CN)_5NO]$ எனும் சேர்வையின் பெயரானது
I. Potassium Ferriccyanonitro (I)
II. Potassium PentacyanonitrocylFerrate (III)
III. Potassium PentacyanonitrocylFerrate (II)
IV. Potassium PentacyanonitrocylIron (II)
V. Potassium PentacyanonitrocylIron (III)

25. 14.4g துகள் நிலை $FeC_2O_4$ பெறப்பட்டு இதனுள் நீர் சேர்க்கப்பட்டு பின்னர் அமிலமாக் கப்பட்ட பின்னர் 0.1M செறிவுடைய நியம $KmnO_4$ நியமிப்பு செய்யப்பட்டது. நியமிப்பின் போது அளவி வாசிப்பு? ($cm^3$) (Fe=56, C=12, O=16, K =39, Mn=55)
I. 6 II. 60 III. 100 IV. 400 V. 600

26. பின்வருவனவற்றுள் வேறுபட்ட வடிவத்தையுடைய மூலக்கூறு/ அயன்?
I. $ICL_2^-$ II. $XeF_4$ III. $XeF_2$ IV. $ClF_3$ V. $IF_4^-$

27. $Na_2CO_3$, NaOH கொண்ட கரைசலின் 25ml பினோப்தலைக் காட்டியாக பயன்படுத்தி $0.5moldm^{-3}$ hcl ஆல் நியமித்தபோது 25ml தேவைப்பட்டது. விளைவு கரைசல் தொடர்ந்து மீதைல் செம்மஞ்சள் காட்டி பயன்படுத்தி நியமித்தபோது அதே அமிலத்தின் 10ml தேவைப்பட்டது. ஏனில் கூறுகளிலுள்ள NaOH செறிவு ($moldm^{-3}$) இல் யாது?
I. 0.15 II. 0.25 III. 0.05 IV. 0.30 V. 0.03

(இரசாயனவியல் வெளியீடு I இன் தொடர்ச்சி 12.04.2006 ஆம் திகதிய கல்விச்சுடரில் வெளிவரும்.)

## விடைக் குறிப்புகள்

# இணைந்த கணிதம் II

வெளியீடு 01

திரு S.S. செந்தில்ராஜ். B.Sc. யாழ்.

(இணைந்த கணிதம் விடைக்குறிப்புகள் 29.03.2006ஆம் திகதிய கல்விச்சுடரில் வெளியாகியிருந்தன. அதன் தொடர்ச்சி இங்கு பிரசுரமாகின்றன.)

Sin விதிப்படி :

$\frac{T}{Sin\alpha} = \frac{W}{Sin(90-\theta)}$ [10]

$\frac{T}{Sin\alpha} = \frac{W}{Cos\theta}$

$T = \frac{w\,Sin\alpha}{Cos\theta}$

$= \frac{W\,Sin\alpha\,(a+\ell)}{\sqrt{\ell^2+2a\ell}}$ [05]


(ii) $\frac{R}{Sin(90-\alpha+\theta)} = \frac{W}{Sin(90-\theta)}$ [05]

$\frac{R}{Cos(\alpha-\theta)} = \frac{W}{Cos\theta}$

$R = \frac{W\,Cos(\alpha-\theta)}{Cos\theta}$ [05]

[50]

(b)




[05]

(0, 0) $\curvearrowleft$ 45 = G —1 [05]

(1, 1) $\curvearrowleft$ X - Υ + G = 39

X - Υ = -6 —2 [05]

(0,5) $\curvearrowleft$ 5X + G = 0 [05]

X = -9


∴ Υ = -3

தாக்கக் கோட்டின் சமன்பாடு

Y. X – x . Υ + G = 0

-9y + 3x + 45 = 0

x – 3y + 15 = 0 [05]




→ X = P + Q Cosθ

$= P + \frac{4Q}{5} = -9$

5P + 4Q = -45 — ① [05]

↑ Υ = Q Sinθ = $\frac{3Q}{5}$ = -3 [05]


Q = -5N [05]

∴ 5P – 20 = -45

P = -5N [05]

[50]

06] (a)




தொகுதியின் சமனிலைக்கு ↑ 2R = 2W

R = W [05]

A $\curvearrowleft$ AB இற்கு திருப்பம் = o

$-W\frac{a}{2}Sin\alpha - \Upsilon(a-b)Cos\alpha + \Upsilon a\,Cos\alpha = 0$ [10]

$-W\,atan\alpha - 2\Upsilon(a-b) + 2\Upsilon a = 0$

$-W\,atan\alpha - 2yb = 0$


$\Upsilon = \frac{awtan\alpha}{2b}$ [05]

மூட்டில் மறுதாக்கம் $R = \sqrt{0+y^2}$

$= \frac{aw}{2b}tan\alpha$ [10]

[40]

(b)




தொகுதிக்கு A $\curvearrowleft$ = 0

A $\curvearrowleft$ P Cos 30 atan 30 = W [atan 60 Cos 30 + a] [05]

$P\frac{\sqrt{3}}{2}\cdot\frac{1}{\sqrt{3}} = W\left[\sqrt{3}\,\frac{\sqrt{3}}{2}+1\right]$

$\frac{P}{2} = \frac{5W}{2}$


P = 5W [05]

[05]

→ X = P Cos 30 = $5W\frac{\sqrt{3}}{2}$

↑ Υ = P Sin 30 + W

$= \frac{7W}{2}$ [05]




| கோல் | இழுவை | உதைப்பு | |
|---|---|---|---|
| AB | - | $\sqrt{3}$ . 5W / $\sqrt{2}$ | 05 |
| BC | - | 2W | 05 |

A இல் மறுதாக்கம் $R = \sqrt{x^2+y^2}$

$= \sqrt{\left[\frac{5W\sqrt{3}}{2}\right]^2 + \left[\frac{7W}{2}\right]^2}$ [05]

$R = \sqrt{31}W$ [05]

(இணைந்த கணிதம் விடைக்குறிப்புகளின் தொடர்ச்சி 12.04.2006ஆம் திகதிய கல்விச்சுடரில் வெளிவரும்)

## விடைக் குறிப்புகள்

# இரசாயனவியல் I

வெளியீடு 01

V.C.அன்பழகன் B.Sc.

| | | | |
|---|---|---|---|
| 01) 1 | 02) 2 | 03) 5 | 04) 2 |
| 05) 4 | 06) 4 | 07) 5 | 08) 1 |
| 09) 2 | 10) 3 | 11) 3 | 12) 5 |
| 13) 4 | 14) 2 | 15) 2 | 16) 4 |
| 17) 1 | 18) 3 | 19) 4 | 20) 1 |
| 21) 3 | 22) 1 | 23) 5 | 24) 1 |
| 25) 4 | 26) 3 | 27) 1 | 28) 3 |
| 29) 4 | 30) 4 | 31) 1 | 32) 1 |
| 33) 4 | 34) 4 | 35) 1 | 36) 2 |
| 37) 3 | 38) 1 | 39) 1 | 40) 1 |
| 41) 4 | 42) 4 | 43) 2 | 44) 4 |
| 45) 2 | 46) 3 | 47) 4 | 48) 3 |
| 49) 4 | 50) 4 | 51) 3 | 52) 5 |
| 53) 2 | 54) 5 | 55) 2 | 56) 2 |
| 57) 5 | 58) 2 | 59) 2 | 60) 5 |

(இரசாயனவியல் பகுதி II இன் விடைக்குறிப்புகள் 12.04.2006ஆம் திகதிய கல்விச்சுடரில் வெளிவரும்.)